Registered as a news paper. பக்கங்கள்: பத்து விலை: ரூபா 6.00


# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

கர்ப்பிணி தாய்மாருக்கும், சிறார்களுக்கும் ஏற்ற போஷாக்கு நிறைந்த சத்து மா
ஜீவாகாரம்

அண்ணா தொழிலகம்
இணுவில் (சி-1428) T.P.-2223565

மலர் : 01 திருவள்ளுவர் ஆண்டு: 2034 ஆவணி 18 ஆம் நாள், ஹிஜ்ரி 1425 றஜப் 06 (04.09.2003) வியாழக்கிழமை இதழ்: 335



பஸ்ஸுடன் மோதி சின்னாபின்னமாகிக் கிடக்கிறது ஹைஏஸ்.



முன்புறம் சிதைந்த நிலையில் மோதுண்ட பஸ்

## முகமாலையில் போராளி ஒருவர் கைதாகி விடுவிப்பு

முகமாலை சோதனைச் சாவடியில் வைத்து போராளி ஒருவர் படையினரால் கைதுசெய்யப்பட்டு விலங்கிடப்பட்ட சம்பவம் ஒன்று நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

கைவிலங்கிடப்பட்ட அந்தப் போராளியிடம் சிங்கள மொழியில் எழுதப்பட்ட படிவம் ஒன்றில் கையெழுத்திடுமாறு படையினர் நிர்ப்பந்தித்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

படையினரின் இச்செயல் குறித்து மனித உரிமை குழுவிடம் முறையிடப்பட்டுள்ளது.

வன்னியில் இருந்து விடுமுறையில் யாழ்ப்பாணம் சென்று அங்கிருந்து வன்னி திரும்பும்போதே

(10 ஆம் பக்கம் பார்க்க)

# ஏ-9 வீதியில் ஹைஏஸ் வான் விபத்து;
# தந்தை, மகள் உட்பட மூவர் உயிரிழப்பு!

## ஜேர்மனியிலிருந்து 20 வருடங்களின் பின்னர் யாழ். வந்து திரும்பியவர்களுக்கு அவலம்!

(கிளிநொச்சி)

**ஏ-9 வீதியில், கிளிநொச்சிக்கும் பரந்தனுக்கும் இடையில் நேற்று மாலை பஸ்ஸுடன் ஹைஏஸ் வான் மோதியதில் ஏற்பட்ட கோர விபத்தில், ஜேர்மனியிலிருந்து 20 வருடங்களின் பின்னர் யாழ்ப்பாணம் வந்து திரும்பிக் கொண்டிருந்த ஒரே குடும்பத்தைச் சேர்ந்த தந்தையும் மகளும் மற்றும் வாகனச் சாரதியுமாக மூவர் கொல்லப்பட்டனர். மேலும் மூவர் காயமடைந்தனர்.**

பரந்தன் சந்திக்கும், கரடிப்போக்குச் சந்திக்கும் இடையிலுள்ள உடைந்த பாலமொன்றுக்கு அருகிலேயே இந்தக் கோர விபத்து இடம்பெற்றது.

கொல்லப்பட்டவர்களில் இருவர் இருபது வருடங்களின் பின்னர் ஜேர்மனியிலிருந்து யாழ்ப்பாணம் வந்து திரும்பியவர்களாவர்.

சம்பவம் நடந்த இடத்திலேயே வான் சாரதி கொல்லப்பட்டார். படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலைக்கு எடுத்துச்செல்லப்பட்ட தந்தையும் மகளும் இடைவழியில் உயிரிழந்தனர்.

இந்தச் சம்பவத்தில் இராசகுல சிங்கம் (வயது 47), அவரது மகள் யசோதா (வயது 19) ஆகியோருடன் வாகனச் சாரதியும் கொல்லப்பட்டார்.

அத்தோடு - ஈஸ்வரி (வயது 43), விஷ்ணு (வயது13) யாழ்ப்பாணம் நாச்சிமார் கோவிலடியைச் சேர்ந்த சுரேந்திரராசா (வயது 31) ஆகியோர் படுகாயமடைந்தனர்.

பலியான வான்சாரதியின் உடல் துண்டங்கள் சம்பவம் நடந்த இடத்தில் சிதறிக்காணப்பட்டதுடன், வானின் பாகங்கள் ஐம்பது அடி தூரத்திற்கப்பால் சிதறிக் கிடந்தது.

## தமிழ்ச்செல்வன் குழுவினர் இன்று வன்னி திரும்புவர்!

(கிளிநொச்சி)

தமிழீழ அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன், தளபதி கேணல் கருணா உள்ளிட்ட புலிகளின் குழுவினர், இன்று காலை கிளிநொச்சி வருகின்றனர்.

கடந்த மாதம் 19 ஆம் திகதி வன்னியில் இருந்தும், மட்டக்களப்பில் இருந்தும் பாரிஸ் சென்ற புலிகளின் குழுவினர் - இடைக்கால நிர்வாக சபை தொடர்பான புலிகளின் திட்ட வரைபினை, சட்ட வல்லுநர்களின் உதவியுடன் தயாரித்திருந்தனர்.

பின்னர், அங்கிருந்து சுவிற்சர்லாந்துக்குச் சென்ற இவர்கள், சுவிஸ் அரசின் வெளியுறவு அமைச்சின் அதிகாரிகளைச் சந்தித்துக் கலந்துரையாடியிருந்தனர். நேற்று சுவிஸில் இருந்து தாயகம் நோக்கிய தமது பயணத்தை ஆரம்பித்த இந்தக் குழுவினர், இன்று காலை வன்னி வருகின்றனர்.

### சமாதானப் பேச்சுக்களை முன்னெடுக்க

## நோர்வே சமாதானக் குழுவினர் 17 ஆம் திகதி இலங்கை வருகை!

(கொழும்பு)

நோர்வே துணை வெளியுறவு அமைச்சர் விதார் ஹெல்கிசன் மற்றும் விசேட தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் ஆகியோர் 17 ஆம் திகதி இலங்கைக்கு வரவுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

தடைப்பட்டுள்ள சமாதான நடவடிக்கைகளை முடுக்கிவிடும் நோக்கத்திலேயே இவர்களின் வருகை அமைந்துள்ளதாக நோர்வே தூதரக அதிகாரிகள் கருத்துத் தெரிவித்தனர்.

இலங்கை வரும் சொல்ஹெய்ம், அரசாங்கத்தோடும் விடுதலைப் புலிகளோடும் பேச்சுக்களை நடத்துவார் என்றும் செய்திகள் தெரிவிக்கின்றன.

## மட்டக்களப்பு கட்டளை அதிகாரியாக கேணல் லக்கி அமரதுங்க நியமனம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்ட பாதுகாப்பு இணைப்பதிகாரியாக கேணல் லக்கி அமரதுங்க பதவிஏற்றுள்ளார்.

23 ஆவது படைப்பிரிவின் மாவட்ட கட்டளையிடும் அதிகாரியாக பதவியேற்றுள்ள இவர், மின்னேரியா பிராந்திய தலைமை அலுவலகத்திலிருந்து இடமாற்றப்பட்டுள்ளார்.

கடந்த ஒரு வருடத்துக்கு மேலாக மட்டக்களப்பு மாவட்ட கட்டளை அதிகாரியாக கடமைபுரிந்த கேணல் ராஜித டீ சில்வா, படைத்துறை தலைமையகத்துக்கு இடமாற்றப்பட்டுள்ளார்.

## கல்வி அமைச்சின் வாசல்களை மறித்து பகுதிநேர ஆங்கில ஆசிரியர்கள் மறியல்!

வடக்கு - கிழக்கு கல்வி அமைச்சுக்கு வெளியே அமைதியான முறையில் போராட்டம் நடத்திவந்த பகுதிநேர ஆங்கில ஆசிரியர்கள், நேற்றுக் காலை திடீரென கல்வி அமைச்சின் வாசல்களை வழிமறித்து, எவரையும் உள்ளே செல்லவிடாது போராட்டம் நடத்தினர்.

இதையடுத்து சம்பவ இடத்திற்கு வந்த பொலிஸார் - போராட்டத்தில் ஈடுபட்ட ஆசிரியர்களை வாசல்களை விட்டு வெளியே சென்று அமைதியான முறையில் போராட்டத்தை நடத்துமாறும், அவ்வாறு செல்லாவிட்டால் தாம் பலவந்தமாக எல்லோரையும் அகற்றவேண்டி வரும் எனவும் தெரிவித்தனர்.

இதனையடுத்து, பகல் பன்னிரண்டு மணியளவில் - கல்வியமைச்சின் வாசல்களை விட்டகன்று, வெளியில் தமது போராட்டத்தைத் தொடர்ந்த ஆசிரியர்கள்,

நீதி கிடைக்கும்வரை - தமது போராட்டம் தொடருமெனத் தெரிவித்தனர்.

இதேவேளை - மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த 600 பகுதிநேர ஆங்கில ஆசிரியர்கள், தம்மை நிரந்தரமாக்குமாறு கோரி, மகஜர் ஒன்றினை நேற்று கல்வி அமைச்சுக்கு அனுப்பியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

### விண்ணாணம் விநாசியர்



சமாதானக் காலத்திலும் சுற்றி வளைப்புக்குக் குறைவில்லை.

## 1 லட்சம் ரூபா செலுத்துமாறு உயர்நீதிமன்றம் தீர்ப்பு

கடந்த பொதுத்தேர்தலின்போது, வடக்கு - கிழக்கின் சில பகுதிகளில், இராணுவத்தினரின் வீதித் தடைகள் காரணமாக, தாம் வாக்களிக்கும் வாய்ப்பை இழந்ததாகத்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியா சுற்றிவளைப்பில் அறுபது பேர் கைதாகினர்!

(வவுனியா)

வவுனியாவில் கடந்த இரு தினங்களாக பொலிஸார் மேற்கொண்ட சுற்றிவளைப்பில், 60 இற்கு மேற்பட்டவர்கள் கைதுசெய்யப்பட்டனர்.

காரணங்கள் எதுவுமின்றி இளம் வயதுடையவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளமை குறித்து வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் - பொலிஸ் மா அதிபர் ரி.ஆனந்தராஜாவின் கவனத்துக்குக் கொண்டுவந்துள்ளார்.

நேற்றுமுன்தினம் இரவு மரக்காரம்பளை, கணேசபுரம், சாஸ்திரி கூழாங்குளம் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 10 பேர் பொலிஸாரின் சுற்றிவளைப்பின்போது கைதுசெய்யப்பட்டிருந்தனர்.

## நோர்வே அரசின் நிதியுதவியுடன்

# மட்டக்களப்பு - பொலநறுவவை இணைக்கும் நூறு கிலோமீற்றர் நீளமான வீதி புனரமைப்பு!

(மட்டக்களப்பு)

நோர்வே அரசின் டேபா திட்டத்தின் நிதியிலிருந்து, மட்டக்களப்பு-பொலநறுவ மாவட்டங்களை இணைக்கும் 100 கிலோமீற்றர் நீளமான பாதை புனரமைக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

முதற்கட்டமாக - பட்டிருப்பு பாலத்திலிருந்து வலையிறவு வரையும், அடுத்தகட்டமாக - கரடியனாறு முதல் தரவை வரையும், புனரமைக்கப்பட்டு இறுதிக்கட்டமாக - இப்பாதை வெலிக்கந்தைவரை நீடிக்கப்படும் என்று, டேபா திட்டப் பணிப்பாளர் கே.பாக்கியராசா தெரிவித்தார்.

இப்பாதை - மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள களுவாஞ்சிக்குடி, வெல்லாவெளி, பட்டிப்பளை, வவுணதீவு, செங்கலடி உட்பட பல பாதிக்கப்பட்ட பிரதேசங்களை ஊடறுத்துச் செல்வது இங்கு குறிப்பிடத்தக்கது.

## 17 பாடசாலை அதிபர்களிடம் லஞ்ச ஆணைக்குழு விசாரணை

(கொழும்பு)

கொழும்பில் உள்ள ஏழு பிரபல பாடசாலைகள் உட்படப் பதினேழு பாடசாலைகளின் அதிபர்கள், உப அதிபர்கள் மீது, லஞ்ச விசாரணை ஆணைக்குழு விசாரணைகளை ஆரம்பித்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சட்டத்துக்கு விரோதமாக நிதி பெற்றார்கள் என்று 11 அதிபர்கள் மீதும், லஞ்சம் பெற்றார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில் 6 அதிபர்கள் மீதும் - விசாரணை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

## அம்பாறை வழுக்கிப்பட்டியவில்

# இந்துக் கோவில் அமைப்பதற்கு மெத்தா நந்ததேரர் எதிர்ப்பு!

(அம்பாறை)

அம்பாறை வழுக்கிப்பட்டிய என்ற இடத்தில் இந்துக் கோயில் அமைக்கப்படுவதை - புதைபொருள் ஆராய்ச்சியாளரான மெத்தா நந்ததேரர் எதிர்த்துள்ளார்.

மேற்படி இடத்தில் - கி.மு. 5 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்ததாகக் கருதப்படும் பௌத்த சின்னங்கள் பலவற்றை மெத்தா தேரர் கைப்பற்றியிருந்தார்.

கடந்தவாரம் வழுக்கிப்பட்டியவுக்குச் சென்ற மெத்தா நந்ததேரரை- அங்கு செல்ல, விடுதலைப் புலிகள் அனுமதி மறுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, வழுக்கிப்பட்டியா என்ற இடத்தினை - வழுக்கப்பட்டிக்குளம் என அங்குள்ள தமிழர்கள் அழைக்கின்றனர்.

## சதுரங்கப் பயிற்சி வகுப்புக்கள்

(கிளிநொச்சி)

தமிழீழ மாணவர் அமைப்பினரால், சதுரங்கப் பயிற்சி வகுப்புக்கள் - மாணவர்கள் மட்டத்தில் பரவலாக நடத்தப்பட்டுவருகின்றது.

இதன் முதற்கட்டமாக நேற்றுக் கிளிநொச்சி மத்திய கல்லூரியில் இந்தப் பயிற்சி வகுப்பு நடைபெற்றது. இதில் பல மாணவர்கள் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.


## பணிநிலை வெற்றிடம்

- விற்பனை முகவர் (ஆண்) :- விற்பனைத் துறையில் தேர்ச்சி பெற்றவராயும், ஆங்கில மொழியில் பேச்சுவன்மையுடையவராயும் இருத்தல் வேண்டும்.
- கணக்காளர் (பெண்) :- கல்வித்தகைமை
  க.பொ.த உயர்தரத்தில் வர்த்தகப் பிரிவில் சித்தியடைந்திருக்க வேண்டும். ஆங்கிலம், கணனியில் நன்கு தேர்ச்சிபெற்றவராய் இருத்தல் வேண்டும்.
  வயது :- 25-35

**சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்**

10.09.2003 புதன்கிழமை காலை 9.00 மணிக்கு நற்சான்றுப் பத்திரங்களுடன் நேரில் சமுகந்தரவும்.

**E.U.T**

கந்தையா வீதி,
சுன்னாகம் கிழக்கு,
சுன்னாகம்

(சி-1437)

**நிறஞ்சனாஸ்** சங்கானை

அர்ஜுன் மனிஷா நடித்த

**முதல்வன்**

காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே.)

வெள்ளி, சனி, ஞாயிறு தினங்களில் மட்டும்

**LONG KISS GOODNIGHT**

இரவுக் காட்சி. 8.45 (பு.நே)

(சி-1425)

**ராஜா** யாழ்ப்பாணம்.

மாதவன், சிம்ரன், சினேகா நடித்த

**பார்த்தாலே பரவசம்**

காட்சிநேரம் 10.30, 2.30, 6.30. 9.30 (பு.நே)

ரிக்கற் முற்பதிவு செய்துகொள்ளலாம்.

(சி-1424)


## பனை தென்னை வள தொழில்நுட்பச் சான்றிதழ் கற்கைநெறி

## CERTIFICATE COURSE IN PALM TECHNOLOGY

யாழ்.பல்கலைக்கழக விவசாய பீடத்தினால் நடாத்தப்படவிருக்கும் மேற்படி கற்கைநெறிக்கான விண்ணப்ப முடிவுத் திகதி 16.09.2003 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது என்பதை அறியத்தருகின்றேன்.

பதிவாளர்,
யாழ்.பல்கலைக்கழகம்.
01.09.2003

(சி-1438)


# மிதிவெடி அபாயக் கல்வி வாரம் - யாழ். மாவட்டம்

## செப்ரெம்பர் 01 - 07

## மிதிவெடி அகற்றலுக்கு எமது பங்களிப்பு

**காலங்கள் கடந்து சென்றபோதும் மிதிவெடியின் அபாயங்கள் எம்மை விட்டு அகன்று செல்லவில்லை**

**மிதிவெடிப் பிரச்சினையை முற்றாக இல்லாது ஒழிக்க மிதிவெடி அகற்றும் நிறுவனங்களிற்கு மக்களாகிய நாம் எமது ஒத்துழைப்பை வழங்குவோம்.**



- மிதிவெடி அகற்றும் பிரதேசங்களுக்கு எத்தேவை கருதியும் உட் செல்லாதிருப்போம்.
- மிதிவெடி அகற்றும் இடங்களிலுள்ள மிதிவெடி அபாயப் பலகைகள், மற்றும் நிறக்கட்டைகள், அதனோடு சம்பந்தப்பட்ட வேறு பொருட்கள் அந்தந்த இடங்களில் இருப்பதை உறுதிசெய்வோம்.
- மிதிவெடி அகற்றிய பிரதேசங்களை வைபவரீதியாக கையளிக்கும் வரை அப்பிரதேசத்தினுள் எக்காரணம் கொண்டும் செல்லாது இருப்போம்.
- மிதிவெடி அகற்றுபவர்களினதும், மிதிவெடி அபாயக் கல்வித் திட்ட செயற்பாடுகளில் ஈடுபட்டிருப்பவர்களினதும் அறிவுரைகளை கேட்டு நடப்போம்.
- விரும்பத்தகாத செயலில் ஈடுபடுவோருக்கு எம்மால் இயன்றளவு அறிவுரைகளை வழங்குவோம்.
- மிதிவெடி அகற்றுபவர்களிற்கும், நிறுவனங்களிற்கும் எந்தநேரமும் ஏற்ற ஒத்துழைப்பை வழங்குவோம்.

**மாவட்ட மிதிவெடிச் செயற்பாட்டு அலுவலகம் - யாழ்ப்பாணம்**

(சி-1421)

# நிறைவேற்று அதிகாரிகளின் நியமனத்திற்கு உயர் நீதிமன்றம் தற்காலிகமாக தடைவிதிப்பு!

(கொழும்பு)

இலங்கை முதலீட்டு சபையின் தென்பிராந்தியத்துக்கான பிரதம நிறைவேற்று அதிகாரியின் நியமனத்தை, உச்ச நீதிமன்றம் தற்காலிகமாக இடைநிறுத்தி வைத்துள்ளது.

இலங்கை முதலீட்டு சபைக்கு எதிராக - டொன்ஜோன் ரத்னாயக்க என்பவர் தாக்கல் செய்த மனுமீதான விசாரணையின்போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

மேற்படி மனுமீதான விசாரணை- உச்ச நீதிமன்ற நீதிபதிகள், பிரதம நீதியரசர் சரத் என். டி.சில்வா ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

நேர்முகப் பரீட்சை மூலம் மேற்குறித்த பதவிக்குத் தான் தெரிவு செய்யப்பட்டதாகவும், அதை விடுத்து நேர்முகத் தேர்வுக் குழுவில் இருந்த ஒருவர் அந்தப் பதவியில் நியமிக்கப்பட்டுள்ளதாகவும் மனுதாரர் தனது மனுவில் குறிப்பிட்டுள்ளார்.

இம்மனுவில், அமைச்சர் ஜி.எல். பீரிஸும் பிரதிவாதியாகக் குறிப்பிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கம்பஹா மாவட்டத்தில் நேற்று சட்டத்தரணிகள் பகிஷ்கரிப்பு!

கம்பஹா மாவட்டத்தின் சகல நீதிமன்றங்களிலும் கடமையாற்றும் சட்டத்தரணிகள், நேற்று நீதிமன்றங்களிற்குச் சமுகமளிக்கவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

கம்பஹா பிரதேச உயர் பொலிஸ் அதிகாரி ஒருவர் மேற்கொண்ட நடவடிக்கைகளிற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் விதத்திலேயே, நேற்று சட்டத்தரணிகள் நீதிமன்ற நடவடிக்கைகளைப் புறக்கணித்ததாகத் தெரியவருகிறது.

முறைப்பாடு ஒன்றைச் செய்யச் சென்ற இரண்டு சட்டத்தரணிகளிடம், குறிப்பிட்ட பொலிஸ் அதிகாரி அச்சுறுத்தும் வகையில் நடந்து கொண்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. மற்றுமொரு பொலிஸ் அதிகாரியால் விடுக்கப்பட்ட அச்சுறுத்தல் தொடர்பாகவே இவர்கள் முறைப்பாடு செய்யச் சென்றமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, இந்த சம்பவம் தொடர்பாகத் தன்னை சந்திக்குமாறு கம்பஹா மாவட்ட சட்டத்தரணிகளைப் பொலிஸ்மா அதிபர் கேட்டுள்ளார்.

# படுகொலையான மக்களுக்கு முழுநாள் துக்கதினம் அனுஷ்டிப்பு

(மட்டக்களப்பு)

சிறிலங்கா இராணுவத்தினரால் கொல்லப்பட்ட பொதுமக்களிற்காக, நாளை வெள்ளிக்கிழமை முழுநாள் துக்கதினம் அனுஷ்டிக்கப்படவுள்ளது.

இதற்கான அழைப்பை மட்டக்களப்பு மாவட்ட மக்கள் முன்னணி விடுத்துள்ளது. 1990 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் - அகதி முகாம் ஒன்றின் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் 158 தமிழ மக்கள் கொல்லப்பட்டனர்.

இவர்கள் அனைவரையும் நினைவு கூர வேண்டியது தமிழர்களாகிய அனைவரினதும் கடமையாகும். என மக்கள் முன்னணி விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது.

# வெளிவிவகார அமைச்சர் வெளிநாடுகளுக்கு பயணம்

வெளிவிவகார அமைச்சர் ரிரோன் பெர்னாண்டோ உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டு - பஹ்ரின், லெபனான் ஆகிய நாடுகளுக்குப் பயணமாகியுள்ளார்.

இந்த நாடுகளில் பணிபுரியும் இலங்கையரின் நலன்புரி விடயங்கள் தொடர்பாகவும், இலங்கையின் சுற்றுலாத்துறையை மேம்படுத்துவது தொடர்பாகவும், அமைச்சர் இந்த விஜயத்தின்போது பேச்சுவார்த்தைகளை நடத்துவார் என வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

தனது பயணத்தின்போது அமைச்சர் - அந்த நாடுகளின் உயர்மட்டத் தலைவர்களையும் சந்தித்துப் பேசவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

நேற்றுக்காலை 8.45 மணியளவில் கட்டுநாயக்க விமான நிலையத்திலிருந்து அமைச்சர் புறப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.



## முக்கிய கூட்டம்

வலிகாமம் வடக்கிலிருந்து இடம்பெயர்ந்து நலன்புரி நிலையங்களில் வசிக்கும் மக்களின் நலன் தொடர்பான கூட்டம் நாளை பி.ப.4.00 மணிக்கு கோட்ட அரசியல்துறை செயலகத்தில் இடம் பெறவுள்ளதால் அனைத்து நலன்புரி நிலைய நிர்வாகிகளையும் இந்தக்கூட்டத்தில் தவறாது கெலந்து கொள்ளுமாறு நலன்புரி நிலையங்களின் சமாஜத் தலைவர் கேட்டுள்ளார்

## கட்டுநாயக்க விமான நிலையத்தை

# அரச, தனியார்துறை பங்களிப்புடன் அபிவிருத்தி செய்வதற்குத் திட்டம்!

பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தை - அரச, தனியார் துறைகளின் பங்களிப்புடன் அபிவிருத்தி செய்யக் கொள்கையளவில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பாகத் தற்போது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக விமானநிலைய விமான சேவைகளின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

பயணிகள் பிரிவு, விமான தரிப்பிடம், பொருட்களை ஏற்றி இறக்கும் பிரிவு ஆகியவற்றுடன் விமான ஓடுபாதை, விமான கட்டுப்பாட்டு நிலையம் ஆகியவற்றையும் விஸ்தரிக்க இந்த திட்டத்திலே உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இந்த திட்டத்தை நடைமுறைப்படுத்த நியூஸிலாந்து நிறுவனம் ஒன்று ஏற்கனவே விருப்பம் தெரிவித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# கடன்களுக்கான வட்டியை இலங்கை வங்கி குறைப்பு

(கொழும்பு)

வங்கிக் கடன்களுக்கான வட்டி வீதத்தைக் குறைக்க, இலங்கை வங்கி தீர்மானித்துள்ளது. இதனால், சிறிய மற்றும் மத்தியதரக் கைத்தொழில் முயற்சியாளர்கள் பெரிதும் நன்மை அடைவார்கள். இதன்மூலம், வர்த்தகத்துறையில் போட்டித் தன்மை அதிகரிக்கும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, நாட்டிலுள்ள அனைத்து வங்கிகளும் தமது வட்டி விகிதங்கள் தொடர்பான முழுமையான தகவல்களை விரைவில் வெளியிடவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# அமைச்சரது நண்பரின் இறுதிச்சடங்கில் துப்பாக்கி வேட்டுக்கள் தீர்த்து மரியாதை

(கொழும்பு)

கடல் நீரியல் வளத்துறை அமைச்சரது நண்பரின் இறுதிச்சடங்கில் - பொலிஸார் வேட்டுக்களைத் தீர்த்து மரியாதை செலுத்தியுள்ளனர்.

கடல் நீரியல் வளத்துறை அமைச்சர் மகிந்த விஜயசேகரவின் நண்பர் ஒருவர் அண்மையில் இறந்து போனார். அவருடைய இறுதிச்சடங்கு கடந்த திங்கட்கிழமை நடைபெற்றது.

இறுதிச்சடங்கில் கலந்துகொண்ட அமைச்சர், தன்னுடைய நண்பரின் உடலுக்கு இறுதி மரியாதை செலுத்தும் நோக்கில், அவரோடு கூடச்சென்ற மெய்ப்பாதுகாவலரிடம் துப்பாக்கி வேட்டுக்களைத் தீர்க்குமாறு கட்டளையிட்டுள்ளார். மெய்ப்பாதுகாவலரும் இரண்டு துப்பாக்கி வேட்டுக்களைத் தீர்த்து, இறுதி மரியாதை செலுத்தியுள்ளனர்.

அரச சேவையிலுள்ள ஒருவர் அல்லது அரச சேவையில் இருந்து ஓய்வுபெற்ற ஒருவர் இறந்தால் மட்டுமே, இவ்வாறு பொலிஸாரால் இறுதி நிகழ்வில் துப்பாக்கி வேட்டுக்கள் தீர்க்கப்படுவது வழமையாகும் என்பது குறிப்பிடத்தக்கது.

# 4 இலட்சம் பெறுமதியான கஞ்சா கைப்பற்றப்பட்டது

(கொழும்பு)

பொத்துவில் - இறத்தல் பகுதியிலிருந்து நான்கு இலட்சம் ரூபா பெறுமதியான ஐந்து மூடை கஞ்சா - பொத்துவில் பொலிஸாரினால் கைப்பற்றப்பட்டுள்ளது.

மாட்டுவண்டிலில், காட்டுப்பாதையூடாக கடந்த திங்கட்கிழமை கஞ்சாவினை கொண்டுவந்தவேளை, பொலிஸார் திடீரென முற்றுகையிட்டபோது, சந்தேக நபர்கள் மாட்டுவண்டியினை விட்டுத் தப்பியோடி விட்டனர். பொலிஸாரினால் மாட்டுவண்டியுடன் கஞ்சாவும் கைப்பற்றப்பட்டது. தொடர்ந்து பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.(07)

## கொழும்பு - தூத்துக்குடி கப்பல் சேவை

# ஒப்பந்தத்தில் கையெழுத்திட ஜெயலலிதா மறுத்துள்ளார்

(புதுடெல்கி)

இலங்கைக்கும் இந்தியாவுக்கிடையிலான கப்பற்சேவைக்கு, தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா மறுப்புத் தெரிவித்துள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது.

தமிழ்நாடு முதலமைச்சரின் எதிர்ப்பால், இந்தச் சேவையை ஆரம்பித்து வைப்பதற்கு இலங்கை வரவிருந்த இந்தியக் கப்பற்சேவைக்குப் பொறுப்பான அமைச்சரின் வருகை பின்போடப்பட்டுள்ளது.

இலங்கையும் இந்தியாவும் ஓகஸ்ட் மாதம் தூத்துக்குடி - இலங்கை கப்பற்சேவையை ஆரம்பிப்பதாக இருந்தது குறிப்பிடத்தக்கது.

# நாடாளுமன்ற தெரிவுக் கூட்டத்தில் சபாநாயகரையும் அழைக்க முடிவு!

தேர்தல் முறையில் திருத்தம் கொண்டு வருவதற்காக நியமிக்கப்பட்ட நாடாளுமன்றத் தெரிவுக்குழுக் கூட்டத்துக்குத் தேர்தல் ஆணையாளரை அழைப்பதற்கு, நாடாளுமன்றத் தெரிவுக்குழு தீர்மானித்துள்ளது.

இதன் பிரகாரம், இந்த மாதம் 18 ஆம் திகதி இடம்பெறவுள்ள கூட்டத்துக்குத் தேர்தல் ஆணையாளர் திஸநாயக்கவுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது என்று, தேர்தல் முறையில் திருத்தம் கொண்டுவருவதற்கான தெரிவுக்குழுவின் தலைவர் தினேஸ் குணவர்த்தன தெரிவித்தார்.

நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் 20 பேர் அங்கம் வகிக்கின்றனர்.

இது சம்பந்தமாகப் பொதுமக்களிடமிருந்து ஆலோசனைகளும் பெற்றுக்கொள்ளப்படவிருக்கின்றன என்று தினேஸ் குணவர்த்தன மேலும் தெரிவித்தார்.

# மட்டக்களப்பு சிறையில் இளைஞன் மர்ம மரணம்!

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த இளைஞன் - சிறைக்கூடத்தில் மர்மமான முறையில் இறந்து கிடக்கக் காணப்பட்டார்.

இந்தச் சம்பவம் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்றது. இவர் கிரனைட், ம்ற்றும் கிளைமோர் குண்டுகள் வைத்திருந்தார் எனப் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டு, நீதிமன்றத்தில் ஆஜராக்கி சிறை வைக்கப்பட்டிருந்தபோதே, இவர் இறந்து கிடக்க காணப்பட்டார் எனத் தெரியவருகிறது.

இவரது மரணம் - சந்தேகத்துக்கு இடமாக உள்ளதால், மரண விசாரணை நடத்தும் பொருட்டு உடலை, கொழும்புக்குக் கொண்டு செல்ல இருப்பதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

## மீனவ குடும்பங்களுக்கு உதவி

கைதடி-நாவற்குழிப் பகுதியில் உள்ள இருபது மீனவ குடும்பங்களுக்கு அம்டா (AMDA) நிறுவனம் தலா பத்தாயிரம் ரூபா வீதம், இரண்டு இலட்சம் ரூபா பெறுமதியான மீன்பிடி உபகரணங்களை வழங்கியுள்ளது.

கடந்த 29 ஆம் திகதி காலை கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க அலுவலகத்தில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

## இலவச பாடநூல் விநியோகம் 614 மில்லியன் ரூபா ஒதுக்கீடு

பாடசாலை மாணவர்களுக்கு - தொடர்ந்தும் இலவசப் பாடப்புத்தகங்களைப் பெற்றுக்கொடுப்பதற்கென்று, அரசாங்கம் 614 மில்லியன் ரூபாவைச் செலவிடவுள்ளது.

அத்துடன், மாணவர்கள் விரும்பிய வகையில் தெரிவுசெய்யக் கூடியவாறு, ஒவ்வொரு பாடத்துக்கும் மூன்று பாடப்புத்தகங்களை அச்சிடும் பணிகள் உரியமுறையில் மேற்கொள்ளப்பட்டு வருவதாகக் கல்வி அமைச்சர் கருணாசேன கொடித்துவக்கு தெரிவித்தார்.

இலவசப் பாடப்புத்தக விநியோகம் நிறுத்தப்படுவதாகத் தெரிவிக்கப்படுவதில், எந்தவிதமான உண்மையுமில்லை என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

நேற்று கொழும்பில் நடைபெற்ற வைபவமொன்றிலேயே, அமைச்சர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

# பொலீஸாருக்கு எதிராக மக்கள் ஆயிரத்துக்கு மேல் முறைப்பாடு

பொலிஸாருக்கு எதிராக ஆயிரத்துக்கும் மேற்பட்ட முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாகப் பொலிஸ் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இந்த முறைப்பாடுகள் மிகவும் அவதானமாக விசாரிக்கப்படும் என்றும், இதனால் முறைப்பாடு செய்த பொதுமக்களுக்கு எந்தவித பாதிப்பும் ஏற்படாதவாறு பரிசீலிக்கப்படும் எனறும் பொலிஸ் ஆணைக்குழுவின் செயலாளர் பந்துல விஜேரத்ன தெரிவித்துள்ளார்.

பொலிஸ் ஆணைக்குழு பற்றி, பொதுமககள் மத்தியில் வழிப்புணர்வு ஏற்படுத்த இருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# பருவகால மீன்பிடிக்காக பெருமளவானோர் வருகை

வடமராட்சி கிழக்கிற்கு- உடப்பு மற்றும் தென்பகுதியிலிருந்து பெருமளவு மீனவர்கள், தொழில் நிமிர்த்தம் வந்துள்ளார்கள்.

வண்ணான்குளம், சுண்டிக்குளம் ஆகிய பகுதிகளுக்குக் பருவகால மீன்பிடித்தொழிலுக்காக இப்பகுதிக்கு வந்து கரைவலைத் தொழிலில் ஈடுபட்டுள்ளார்கள் அவர்கள், வாடிகளை அமைத்து தங்கியிருந்து தொழிலில ஈடுபட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# கலைகள் - அநீதிக்கு எதிரான ஆர்ப்பரிப்பாகவே நிகழ்கின்றன

## கல்விக்கழகப் பொறுப்பாளர் இளங்குமரன்

(கிளிநொச்சி)

அழகியல் கலைகள் - மனித உணர்வுகளை இணைத்து, செழுமைப்படுத்தும் பாலமாக அமைகின்றன. நெருக்குதல்கள், ஒடுக்குமுறைகள் என்பனவற்றிற்கெதிரான உள வெளிப்பாடுகள்- கலைக்கூடாக எளிதில் வெளிக்கிளம்புகின்றன. இதனால், கலைகள்- அநீதிக்கு எதிரான ஆர்ப்பரிப்பாகவே நிகழ்வதனைக் காண முடிகிறது.

இவ்வாறு நேற்று முன்தினம் நடைபெற்ற பரதநாட்டிய அரங்கேற்ற வைபவத்தில், தமிழீழ கல்விக் கழகப பொறுப்பாளர் வெ.இளங்குமரன் வாழ்த்துரை வழங்கியபோது தெரிவித்தார். கிளிநொச்சி மாவட்ட அழகியல் கலாமன்றத்தின் நடன ஆசிரியை சிவப்பிரகாசம் சிவகுமாரியின் மாணவிகளான - சிவசுப்பிரமணியம் சுதர்சினி, சிவபாதம் பாகேஸ்வரி ஆகியோரின் பரதநாட்டியம் - கிளிநொச்சி மகாவித்தியாலய மண்டபத்தில் நடைபெற்றது.

தொடர்ந்து அவர் உரையாற்றுகையில் -

இத்தகைய கலைகளில் - ஆடற் கலையே முதன்மையாக அமைகிறது. இந்தக் கலையினை ஆர்வத்தோடு பயின்று, இன்றைய அரங்கேற்றத்திற்கூடாக வெளிகொணரும் இவ்விரு மாணவிகளும் பராட்டுக்குரியவர்கள். பெரும் நெருக்கடியான சூழ்நிலையில் வாழ்ந்த எமது சிறார்களுக்கு, இன்றைய அமைதிச் சூழ்நிலை - இதுபோன்ற திறமைகளை வெளிக்கொணர ஒரு வாய்ப்பினை ஏற்படுத்தியுள்ளது எனக்குறிப்பிட்டார். (17)



கிளிநொச்சி மாவட்ட

# ஊனமுற்றோர் புனர்வாழ்வுச் சங்கம் 1537 அங்கத்தவர்களை பராமரிக்கிறது

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்ட ஊனமுற்றோர் புனர்வாழ்வுச் சங்கத்தால்- 1537 ஊனமுற்ற அங்கத்தவர்கள் பராமரிக கப்பட்டு வருகின்றனர்.

கிளிநொச்சி - கரைச்சி, கண்டாவளை, பூநகரி பிரதேச செயலர் பிரிவுகளில் இனங்காணப்பட்ட மேற்படி அங்கத்தவர்களை, இந்த நிறுவனம் தற்போது பராமரித்து வருகிறது.

இவர்களில் யுத்தம் காரணமாக 630 பேரும், விபத்தின் விளைவாக 90 பேரும், நோய்த் தாக்கத்தின் காரணமாக 557 பேரும், பிறப்பில் 260 பேரும் ஊனமடைந்தவர்களாவர்.

கிளி. கரைச்சி பிரதேச பிரிவில் 699 பேரும், பூநகரி பிரதேச செயலர் பிரிவில் 405 பேரும், கண்டாவளைப் பிரதேச செயலர் பிரிவில் 433 பேரும் இவற்றுள் அடங்குவர்.

இவர்களுக்கான புனர்வாழ்வு நடவடிக்கையினை கிளிநொச்சி மாவட்ட ஊனமுற்றோர் புனர்வாழ்வுச் சங்கம், 1990 ஆம் ஆண்டுமுதல் அரச, அரசசார்பற்ற நிறுவனங்களின் நிதியுதவியுடன் மேற்கொண்டு வருகிறது. (17)

### முக்கிய கலந்துரையாடல்

சமுர்த்தி அதிகார சபையின் விசேட கலந்துரையாடல் ஒன்று யாழ். செயலகத்தில் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 6 ஆம் 7 ஆம் திகதிகளில் இந்த கலந்துரையாடல் இடம் பெறவுள்ளது.

இந்த கலந்துரையாடலில் சமுர்த்தி அபிவிருத்தி தொடர்பான பல திட்டங்கள் கலந்துரையாடப்படவுள்ளன.

சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர், பிரதேசசெயலர்கள் இக் கலந்துரையாடலில் கலந்துகொள்ளவுள்ளனர். (ரா)

# இருபது வருட யுத்த நடவடிக்கைகளால் 4 இலட்சத்துக்குமேல் தென்னைகள் அழிவு

குடாநாட்டில் கடந்த 20 வருட யுத்த நடவடிக்கைகளால், 4,27,163 தென்னைகள் அழிக்கப்பட்டுள்ளதாக ஆய்வு ஒன்றின் மூலம் தெரியவந்துள்ளது.

தெங்கு அபிவிருத்திசபை மேற்கொண்ட ஆய்விலேயே, இந்தத் தகவல்கள் கிடைத்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. குடாநாட்டில் 125 கிராம சேவையாளர்கள் பிரிவில் இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

கிளிநொச்சி மாவட்டத்தில்- ஒரு லட்சத்து 47 ஆயிரத்து 286 தென்னை மரங்களும்; முல்லைத்தீவு மாவட்டத்தில்- 2 இலட்சத்து 421 ஆயிரம் தென்னை மரங்களும் அழிவடைந்துள்ளதாக அந்த ஆய்வில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சிறுவர் உரிமைகளை கட்டிக்காக்க அனைவரும் தயாராக வேண்டும்

## சமூகநலத்துறைத் திணைக்களப் பணிப்பாளர்

(யாழ்ப்பாணம்)

சிறுவர் உரிமைகளில இருந்துதான் மனித உரிமைகள் ஆரம்பமாகிறது. எப்போது சிறுவர்களின் உரிமைகளுக்கு மதிப்பளிக்கப்படுகிறதோ, அப்போது தான் மனித உரிமைகள் மதிக்கப்படும். ஆகவே, சிறுவர உரிமைகளுக்கு எப்போதும் மதிப்பளிக்க வேண்டும். இததகைய சிறுவர் உரிமைகளைக் கட்டிக்காக்க அனைவரும் தயாராக இருக்கவேண்டும்.

இவ்வாறு வட - கிழக்கு மாகாண நன்னடத்தைப் பராமரிப்புச் சேவைகள், சமூகநலத்துறைத் திணைக்கள பணிப்பாளர் திருமதி என்.ஆர்.ரஞ்சினி - நேற்று முன்தினம் கிளிநொச்சி மத்திய விளையாடடு மைதானத்தில் நடைபெற்ற, சர்வதேச சிறுவர்தின விளையாட்டு போட்டியில், பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றியபோது குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியதாவது - கடந்த இரண்டு தசாப்தகால கொடிய யுத்தத்தினால், சிறுவர்களே பெருமளவு பாதிக்கப்பட்டுள்ளனர். எமது பகுதியில் சிறுவர்கள் படும் இன்னல்கள் எண்ணில அடங்காதவை. அந்தவகையில், இன்று சிறுவர் இல்லங்களில் வசித்துவரும் நீங்கள் கொடுத்து வைத்தவர்கள். உங்களைப் பராமரிப்பதற்கு தாய், தந்தைபோல பணியாளர்கள், ஆசிரியர்கள் இருக்கின்றனர். உங்களுக்கென நிலம் இருக்கிறது. இந்த வகையில் பெருமைப்படவேண்டும்.

இன்று தந்தை, தாயுடன் கூடியிருந்துகூட பாடசாலை சென்று, கல்வி பயிலமுடியாத நிலையில் இரண்டு இலட்சம் பிள்ளைகள் வசிக்கிறார்கள். இவ்வாறு பாடசாலை செல்லமுடியாதுள்ள இரண்டு இலடசம் பிள்ளைகளையும் பாடசாலைகளுக்கு அனுபபி, அவர்களையும் சமூகத்தில் ஒரு நல்ல ஆளுமைமிக்க பிரஜைகளாக மாற்றுதவற்கு இன்று அனைவரது ஒத்துழைப்பும் மிக அவசியமானதாகும்.

சிறுவர் இல்லங்களில் வசிக்கும் உங்கள் பிரச்சினைகளை யாவரும் அறிந்து கொள்ளவேண்டும் என்ற நோக்குடனும், உங்களின் திறமைகளையும், சாதனைகளையும் வெளிக்காட்டுவதற்காகவுமே, இந்த விளையாட்டுப் போட்டிகளை நாம் நடத்துகிறோம்.

மேல் மாகாணத்தில் 87 சிறுவர் நலத்துறை உத்தியோகத்தர்கள் இருக்கிறார்கள். 78 சிறுவர்கள் உரிமை மேம்பாட்டு உத்தியோகத்தர்கள் கடமையில் இருக்கிறார்கள். ஆனால், எங்களுடைய வட - கிழக்கு மாகாணத்துக்கு அதாவது, 8 மாவட்டங்களில் - 78 பிரதேச செயலர் பிரிவுகள் எமக்குத் தரப்பட்டுள்ளது. 14 சிறுவர் நன்நடத்தை உத்தியோகத்தர்கள் மாத்திரமே சமீபகாலத்தில் நியமிக்கப்பட்டிருந்தனர். நாம் கொடுத்த நெருக்குதல்களை அடுத்து, 24 சிறுவர் உரிமைகள் மேப்பாட்டு உத்தியோகத்தர்கள் தற்போது நியமிக்கப் பட்டுள்ளனர்.

நாம் வட - கிழக்கு மாகாணத்துக்கெனக் கிடைக்க வேண்டிய ஒவ்வொன்றையும், போராடிப் பெறவேண்டிய நிலையிலே உள்ளோம். எமது மண்ணில் சமாதானம் ஏற்பட்டு, தமிழர்களுக்கு என்று ஒரு இடைக்கால நிர்வாகம் ஏற்பட்டால், போரினால் மிகவும் கடுமையாகப் பாதிக்கப்பட்ட சிறுவர்களின் நலனைப் பாதுகாப்பதற்கென, ஒரு தனியான அலகு ஏற்படுத்தப்படவேண்டும். அதாவது, சிறுவர்களுக்கென்று செயலகங்களை நிறுவவேண்டும். அவர்களுக்கான முன்னேற்றத் திட்டங்களை முன்வைக்கவேண்டும்.

சிறுவர்களை மிகவும் நல்லமுறையில் பராமரிக்க வேண்டும். இந்த வகையில், தமிழர் புனர்வாழ்வு கழகத்தின் பணி, மிகச்சிறப்பானதாகும். அவர்களின் பராமரிபில் இருக்கும் சிறுவர் இல்லங்களிலுள்ள சிறுவர்கள், மிகவும் உயர்வாக மதிக்கப்படுகிறார்கள். அவர்களின் சேவையை நான் மனதாரப் பாராட்டுகிறேன் என அவர் மேலும் தெரிவித்தார். (17)

### கிரிக்கெட் சுற்றுப்போட்டியில்

# யாழ்.மத்திய கல்லூரியை எதிர்த்து புனித சம்பத்திரிசியார் விளையாடும்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பாடசாலைகள் கிரிக்கெட் சங்கம் - யாழ்.மாவட்டப் பாடசாலைகளின் 14 வயதுப் பிரிவுகளுக்கிடையில் நடத்திய கிரிக்கெட் சுற்றுப்போட்டியின் இறுதிப் போட்டியில் பங்குபற்றுவதற்கு, யாழ். மத்திய கல்லூரியும், யாழ். புனித சம்பத்திரிசியார் கல்லூரியும் தகுதி பெற்றுள்ளன.

மேற்படி 14 வயதுப் பிரிவு அரை இறுதிப் போட்டியில், யாழ்.புனித சம்பத்திரிசியார் கல்லூரி அணியை எதிர்த்து யாழ்.மத்தியகல்லூரி அணி விளையாடவுள்ளது. (58)

### கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், நல்லூர் கோட்டத்தைச் சேர்ந்த ஊரகக் கிளை செயலாளர்கள் மற்றும் தேசிய எழுச்சிப் பேரவை நிர்வாக உறுப்பினர்களுக்கான கலந்துரையாடல் - நாளை பி.ப. 4.00 மணிக்கு நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இதில் சகல உறுப்பினர்களையும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.


வாழ்க வளமுடன்

HAPPY BIRTHDAY

ஐந்தாவது அகவையில்



பெயர் : தி.பரதன்
முகவரி: 'மதுரா' மூளாய்.

பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்

வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர்:------------------------------------------------

முகவரி :------------------------------------------------

பிறந்த ஆண்டு:------------------------------------------------

கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

------------------------
பெற்றார் ஒப்பம்


### மாகாண கல்வித்திணைக்களம் நடத்திய

# கையெழுத்து சஞ்சிகை போட்டியின் முடிவுகள்

(கிளிநொச்சி)

மாணவர்களின் வாசிப்புத் திறனையும், எழுத்தாக்கத்திறனையும், வளர்த்தெடுக்கும் நோக்கில்- மாகாணக் கல்வித் திணைக்களத்தினால் நடத்தப்பட்டு வரும் கையெழுத்துச் சஞ்சிகை போட்டிகளில், 2002 ஆம் ஆண்டு போட்டி முடிவுகள் வெளியாகியுள்ளன.

மாகாண நிலையில் முதல் மூன்று இடங்களைப்பெற்ற பாடசாலைகளுக்குரிய பரிசில்களும், சான்றிதழ்களும் - தமிழ் இலக்கியப் பெரு விழாவில் வழங்கப்படும்.

போட்டி முடிவுகள் வருமாறு-

**பாலர் - கீழ்ப் பிரிவு (தரம் 3,4)**

1 ஆம் இடம் - தளிர்கள் (வவு. நெளுககுளம் கலைமகள் ம.வி.), 2 ஆம் இடம் - பூந்துணர்மன் (மன். அம்பகாமன் அ.த.க. பாடசாலை துணுக்காய்), 3 ஆம் இடம்- மலரும் மொட்டுக்கள் (யாழ்.மல்லாகம் கனிஷ்ட வித்தியாலயம்).

**பாலர் - மேற்பிரிவு (தரம் 5)**

1 ஆம் இடம் - உதயம் (கல்முனை அல்-முனீர் வித்தியாலயம், சம்மாந்துறை), 2 ஆம் இடம்- மலரும் செல்வங்கள் (யாழ்.உடுப்பிட்டி அ.மி.கல்லூரி), 3 ஆம் இடம்- ஆரம் (கிளி.பல்லவராயன் கட்டு இ.த.க. பாடசாலை).

**இடைநிலைப் பிரிவு - I (தரம் 6,7)**

1 ஆம் இடம்- வளர்நிலா (மட். அமிர்தகழி சித்திவிநாயகர் வித்தியாலயம்), 2 ஆம் இடம்- துலங்கல் (முல்.பாரதி வித்தியாலயம்), 3 ஆம் இடம்- வளரும் உள்ளங்கள் (கல்முனை மருதமுனை அல்-ஹம்ரா வித்தியாலயம்).

**இடைநிலை பிரிவு II (தரம்8,9)**

1 ஆம் இடம் - விழுதுகள் (மன்.புனித ஆனாள் ம.ம.வி. வங்காலை), 2 ஆம் இடம் - அநந்தம் (திருகோணமலை செ்ன்.மேரீஸ் கல்லூரி), 3 ஆம் இடம் - வானவில் (கல்முனை பதியுதீன் மக்மூத் மகளிர் கல்லூரி).

**இடைநிலைப் பிரிவு III (தரம் 10,11)**

1 ஆம் இடம் - திறவுகோல் (புதுக்குடியிருப்பு கண்ணகி ம.வி. மட்டக்களப்பு), 2 ஆம் இடம் - பருவம (முல்.வித்தியானந்தாக் கல்.முள்ளியவளை), 3 ஆம் இடம் - கீற்று (கிளி. இராமநாதன் அ.த.க. பாடசாலை).

**கல்லூரிநிலைப் பிரிவு (தரம் 12,13)**

1 ஆம் இடம் - ஊக்கி (மட்டு. (பட்டிருப்பு ம.ம.வி. களுவாஞ்சிக்குடி), 2 ஆம் இடம் - கடல் (கிளி.வட்டக்கச்சி மகாவித்தியாலயம்), 3 ஆம் இடம்- நறுமுகை (வவுனியா சைவப் பிரகாச மகளிர் கல்லூரி).

### சமூகக்கல்வி ஆசிரியர்களுக்கு செயலமர்வு

(யாழப்ப்பாணம்)

யாழ்.வலயத்துக்குட்பட்ட யாழ். கல்விக் கோட்ட பாடசாலைகளில் தரம் 6,7,8 ஆம் வகுப்புக்களில் சமூகக்கல்வி பாடம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான செயலமர்வு, நாளை யாழ்.வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளதால், யாழ்.கல்வி கோட்ட பாடசாலைகளில் தரம் 6,7,8 ஆம் ஆண்டுகளில் சமூகக்கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களினைத் தவறாது சமுகம் கொடுக்குமாறு, யாழ். வலய கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் கேட்டுக்கொண்டுள்ளார்.

### புழுதிக் காற்றினால் மக்கள் சிரமம்

(நெடுந்தீவு)

நெடுந்தீவு மத்தி சீக்கிரியாம் பள்ளம், பிரதான வீதிக்கு அருகில் அமைந்துள்ள வெட்டுக்களிக்குளம், கடும் வரட்சி காரணமாக, நீர் வற்றிக் காய்ந்தமையால், உவர் புழுதிகள்- தற்போது வீசும் கடுங்காற்றினால் குடிமனைகளுக்குள் அள்ளி வீசப் படுகிறது.

இதன் காரணமாக அப்பகுதியில் வசிக்கும் 75 இற்கும் மேற்பட்ட குடும்பங்களில், பெருமளவு குடும்பத்தினர் புழுதிக்காற்றினால் பெரும் சிரமத்தை எதிர்கொள்கின்றனர்.

அததோடு, இந்த குளம் - பிரதான வீதிக்கு அருகில் இருப்பதனால், வீதியினால் செல்லும் மக்களும், உத்தியோகத்தர்களும், மாணவர்களும் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்குகின்றனர். (2)

# பாதுகாப்புப் பயிர்ச்செய்கையும்

உழைப்போம் உயர்வோம்!

தொழில் மலர்

இலங்கையின் உலர்வலயத்தில் நில அமைப்பு அலை அலையான மேடு பள்ளங்களைக் கொண்டுள்ளதால், பிரதானமாக இரண்டு வகையான பயிர்ச்செய்கை முறைகள் இங்கு மேற்கொள்ளப்படுகின்றன.

1. **மழை வீழ்ச்சியுடன் மேற்கொள்ளப்படுகின்ற மேட்டு நிலப் பயிர்ச்செய்கை**
2. **நீர்ப்பாசன வசதியுடன் மேற்கொள்ளப்படுகின்ற தாழ்நிலப் பயிர்ச்செய்கை (விசேடமாக நெற்செய்கை)**

மழைவீழ்ச்சியுடன் செய்யப்படுகின்ற மேட்டுநிலப் பயிர்ச்செய்கையில் - வீட்டுத் தோட்டச்செய்கையும், சேனைப் பயிர்ச்செய்கையும் அடங்குகின்றன. இலங்கையின் உலர் வலயத்திலும், இடைவலயத்திலும், ஏறக்குறைய இரண்டு மில்லியன் ஹெக்டேயர்களில், இந்த விதமான பயிர்ச்செய்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. பொதுவாக, வீட்டுத் தோட்டங்களில் பழவகைமரங்கள், உணவுப்பயிர்கள், விறகு மற்றும் வெட்டுமரங்களுக்கான பல்லாண்டுத் தாவரங்களே காணப்படும். சிலவேளைகளில், வீட்டுத்தேவைக்கான



மரக்கறிவகைகளும் பயிர் செய்யப்படுகின்றன. இவற்றை விட, நிலையாக வளர்க்கப்படும் பல்லாண்டுத் தாவரங்களும் வீட்டுத்தோட்டங்களில் காணப்படலாம்.

### 1. மேட்டுநிலப் பயிர்ச்செய்கை

| வீட்டுத்தோட்டம் | சேனைச்செய்கை |
|---|---|
| நிலையான பல்லாண்டுத் தாவரங்கள் | நிலையான ஆனால், போகத்திற்குரிய (**Seasonal**) தாவரங்கள். |

### 2. தாழ்நிலச் செய்கை

சேனைச் செய்கைகளில் தானியப் பயிர்கள், அவரையினப் பயிர்கள், கிழங்குப் பயிர்கள் என்பனவற்றுடன் தொழில் துறைப் பயிர்களும் (**Industrial crops**) ஒன்றாகச் செய்கை பண்ணப்படுகின்றன. சாதாரணமாக இரண்டு சேனைச் செய்கைகளுக்கிடையே நீண்டகாலத்திற்கு நிலம் தரிசாக விடப்படும்போது, இக்காலத்தில் விரைவாக வளரும் காட்டு மரங்களிலிருந்து நிலத்தில் விழும் இலைகள் உக்குவதனால், மண்ணின் கட்டமைப்பு முன்னேற்றமடைவதுடன், களைகளின் வளர்ச்சியும் தடுக்கப்படுகின்றது. இவற்றைவிட- விறகையும், தளபாடங்கள் செய்தவற்கான மரத்தையும், கால் நடைகளுக்கான இலை, குழைகளையும் இந்த மரங்களிலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

நாட்டின் சனத்தொகை அதிகரிப்பால், உணவுத் தேவையும், இடத்திற்கான தேவையும் அதிகரிக்கிறது. இதனால், நிலத்தைத் தரிசாகவிடுவதை இயன்றளவு குறைக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது.

ஆனால், நிலத்தைத் தரிசாகவிடும் காலத்தைக் குறைக்கும்போது, முட்புதர்களே அதிகளவு வளர்க்கின்றன. இதனால், வனமரங்களிலிருந்து கிடைக்கும் மேற்கூறிய நன்மைகள் கிடைக்காது விடுவதனால், மண்வளம் குன்றுகிறது. எனவே, இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்காக- மண்வளத்தைப் பேணக்கூடிய புதியதொரு பயிர்ச்செய்கைத் திட்டத்தை (**Crop pattern**) நாம் தயாரிக்கவேண்டும். இந்தத்திட்டம் பின்வரும் நன்மைகளையுடையதாக இருத்தல் அவசியம்.

- **மண்ணரிப்பைத் தடுத்தல்.**
- **மண்வளத்தைப் பேணவும், முன்னேற்றக் கூடியதாகவும் இருத்தல்.**
- **களைகளையும், பீடைகளையும் கட்டுப்படுத்தல்.**
- **விவசாயிகளுக்குத் தேவையான விறகு, கால்நடைகளுக்குத் தேவையான இலை, குழைகளையும் வழங்குதல்.**
- **அதிக விலையுள்ள உள்ளீடுகளின் பாவனையை இயன்ற அளவு குறைத்தல்.**
- **விவசாயிகளால் ஏற்றுக்கொள்ளப்படக் கூடியதாக, பொருத்தமானதாக இருத்தல்.**

இக் கட்டுரையில் கூறப்படும் பாதுகாப்புப் பயிர்ச்செய்கை முறைகள் மேற்கூறிய நிலைகளை இயன்றளவு உள்ளடக்கக் கூடியதாகத் தயாரிக்கப்பட்டுள்ளது.

### பாதுகாப்புப் பயிர்ச்செய்கை என்றால் என்ன?

விலை அதிகமான சக்தி (எரிபொருள்) இயந்திர உபகரணங்கள், பசளைகள், பீடை நாசினிகள் போன்ற உள்ளீடுகளின் மிகக்குறைந்த பாவனையுடன் - மண், மண்வளம், மண் நீர் போன்ற இயற்கை வளங்களைப் பேணிப் பாதுகாகாதது, அவற்றிலிருந்து அதிகூடிய பயனைப்பெற்று, விளைவை அதிகரிப்பதற்காகச் செய்யப்படும் ஒரு பயிர்ச்செய்கை முறையை 'பாதுகாப்புப் பயிர்ச்செய்கைமுறை' என வரைவிலக்கணப் படுத்தலாம்.

பல்வேறு பிரதேசங்களிலுள்ள, வெவ்வேறு சூழ்நிலைகளுக்கு ஏற்ப, பாதுகாப்புப் பயிர்ச்செய்கை வெவ்வேறு விதமாக மேற்கொள்ளப்பட்டாலும், அது பின்வரும் அம்சங்களை அடங்கியதாக இருத்தல் அவசியம்.

- **உணவுப் பயிர்களுடன் வனமரங்களையும் சேர்த்து, கலப்புப் பயிர்ச்செய்கையாக அல்லது வீதி அல்லது ஓடை முறை (Avenue cropping) செய்கையாக வளர்த்தல்.**
- **பல்லாண்டுத் தாவரங்கள், பழமரங்கள், கால்நடை உணவுப் பயிர்களை ஒன்றாகப் பயிரிடல்.**

# கையாளும் முறைகளும்

- **பசுந்தாட் பசளைப் பிரயோகம்.**
- **உயிரியல் முறையில் வளிமண்டல நைதரசனை நிலத்தில் பதித்தல்.**
- **நிலத்தில் படரும் கொடிகளை வளர்த்தல் அல்லது பயிர மதிகளை நிலத்தில் பத்திரக்கலவையாகப் பிரயோகித்தல்.**
- **ஒருங்கிணைந்த பீடைப் பரிபாலனம்.**
- **பயிர்ச்செய்கையுடன் சேர்த்து, கால்நடைகளையும் வளர்த்தல்.**
- **மண் வளம் குறைந்து காணப்பட்டால், சிறிய அளவுகளில் இரசாயனப் பசளைகளைப் பாவித்தல்.**
- **விலை குறைந்த, குறைந்த முயற்சியுடன் இயக்கக்கூடிய நவீன இயந்திரங்களின் பாவனை.**

மேற்கூறப்பட்ட அம்சங்கள் முழுமையானவையாக அமையாவிட்டாலும், உணவு உற்பத்தியில் தன்னிறைவை அடைவதற்கு முக்கிய காரணிகளாக இவற்றைக் கருதலாம்.

### பாதுகாப்புப் பயிர்ச்செய்கை முறைகள்

வெவ்வேறு பிரதேசங்களிலுள்ள மண், காலநிலைக் காரணிகளுக்கு ஏற்ப, அவ்வப்பிரதேசங்களுக்குப் பொருத்தமான பாதுகாப்புப் பயிர்ச்செய்கை முறைகளைத் தயாரித்துக் கொள்வது மிகவும் கடினமான விடயமாகும்.

இருந்தபோதிலும், வெவ்வேறு பிரதேசங்களுக்குகேற்ற விதமாகப் பாதுகாப்புப் பயிர்ச்செய்கை முறை - ஆறு உப முறைகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இந்த உபமுறைகளின் முக்கிய இயல்பு என்னவெனில், நிலத்தை இடைவிடாது சேதனப் பொருட்களால் மூடிவைப்பதன் மூலம், மண் வளத்தைப் பரிபாலிப்பதாகும்.

### உப முறைகள்

- **பூச்சியப் பண்படுத்தல் முறை (Zero Tillage).**
- **பயிர் மீதிகளினால் பத்திரக்கலவையிடல் முறை (Crop Residue Mulching).**
- **கலப்புப்பயிர்ச் செய்கைமுறை (Mixed cropping).**
- **பயிர் பத்திரக்கலவையிடல் முறை (Live Mulching).**
- **விவசாய வனவளர்ப்பு முறை (Agroforestry).**
- **வீட்டுத்தோட்ட வனச்செய்கைமுறை (பல்லினப் பயிர்ச் செய்கை - Agroforesting in Home Graden).**

### 1. பூச்சியப் பண்படுத்தல் முறை

முக்கியமாக இது ஒரு இலகுவான முறையாகும். நிலப் பண்படுத்தலின் பிரதானநோக்கம் - களைகளைக் கட்டுப் படுத்துவதாகும். பூச்சியப் பண்படுத்தல் முறையில், களை கட்டுப்பாடு - களை நாசினி பாவித்தல் மூலம் நிறைவேற்றப்படுகிறது. தரையின் மேல் சகல இடங்களிலும் சமமாகப்படக்கூடியவாறு, மிகச்சிறிய துளிகளாகக் களை நாசினியை விசிறுவதன்மூலம், சிறந்தமுறையில் களைகளைக் கட்டுப்படுத்தலாம். பாரம்பரிய பண்படுத்தல் முறையைப் போலல்லாது, இங்கு பண்படுத்தப்படாத நிலத்தின் மேல், இறந்த களைகளின் சேதனப் பொருள் - ஒரு மூடுபடையாக அமைந்து, மண் அரிமானத்தைப் பெருமளவு தடுக்கிறது.

#### பூச்சியப் பண்படுத்தல் முறையின் நன்மைகளும் தீமைகளும்

**நன்மைகள்**

1. **மழைத்துளிகள் நேரடியாக மண் மீது மோதாததால், மண்ணரிப்பு நடைபெறுவது தடுக்கப்படுகிறது.**
2. **நேரம், சக்தி விரயமாவது தடுக்கப்படுவதுடன், உள்ளீடுகளின் பாவனையும் குறைகிறது.**
3. **மண்ணின் கட்டமைப்பு திருத்தப்படுகிறது.**
4. **மண்ணின் வளம் குறைவது தடுக்கப்படுகிறது.**
5. **நீண்ட காலத்தில், செலவு குறைவான முறையாகும்.**


**தீமைகள்**

1. **சில பயிர்களுக்கு இந்தமுறை பொருந்தாது (உதாரணம் - மிளகாய், கிழங்கு வகைகள்)**
2. **முளைக்கும் முன் விசிறும் களைநாசினியின் (Pre-emergent) பாவனைக்கு அதிகளவு செலவு ஏற்படும்.**

### 2. பயிர் மீதிகளினால் பத்திரக் கலவையிடல்

இந்த முறையின் மூலம் - மழைநீர் நேரடியாக மண்மேற்படையுடன் மோதுவது தவிர்க்கப்படுவதால், மண் மேற்பரப்பில் கடினமான படையொன்று ஏற்படுவது தவிர்க்கப்படுகிறது. அதேபோல், பயிரின் சிறந்த வளர்ச்சிக்கு- பொருத்தமான வெப்பநிலையும், நீரும் - மண்ணில் காணப்படும் களைகள் முளைப்பது தடைசெய்யப்படுவது இம்முறையினால் கிடைக்கும் இன்னுமொரு நன்மையாகும்.

### 3. கலப்புப் பயிர்ச்செய்கை




ஒரு குறிப்பிட்ட நிலப்பரப்பில், ஒரேநேரத்தில் ஒன்றிற்கு மேற்பட்ட பயிர்களைச் செய்கை பண்ணுதல் கலப்புப் பயிர்ச் செய்கை எனப்படும். ஒரு பயிரைத் தனியே செய்கை பண்ணுவதை, கலப்புப் பயிர்ச்செய்கையுடன் ஒப்பிட்டுப் பார்த்தால், கலப்புப் பயிர்ச்செய்கையில் மண்ணரிப்பும், களைகளின் வளர்ச்சியும் குறைவாகக் காணப்படும். இந்த முறையில் அவரையினப் பயிர்கள் - தற்காலிக மூடுபடையாகச் செயற்படுவதுடன், ஒரு பயிர் - ஏதாவதொரு காரணத்தினால் பாதிக்கப்பட்டால், மற்றைய பயிர்களிலிருந்து வருமானத்தைப் பெறலாம்.

### 4. பயிர் பத்திரக் கலவையிடல் முறை

இந்த முறையின் மூலம், மண்ணின் வளம் பேணப்படுவதுடன், மண் அரிமானமும் அதிகளவு குறைக்கப்படுகிறது. விசேடமாக - சென்ற்ரோசீமா (**Centrosema**), பியூரேறியா (**Puraria**), மக்குறோப்ரெலியம் (**Macroptelium**), சோபோகார்ப்பஸ் (**Psophocarpus**), முக்குனா (**Mucuna**) டெஸ்மோடியம் (**Desmodium**) போன்ற தாவரங்கள் உயிர் மூடுபடையாகப் பாவிப்பதற்குச் சிறந்தவையாகும். பொருத்தமான தாவரம் ஒன்றை மூடுபடையாக, நன்கு பரந்து வளர்ந்தபின், இரசாயனமுறை மூலம் அல்லது இயந்திர முறை மூலம் மூடுபடையின் வளர்ச்சியைக் கட்டுப்படுத்தி, மூடுபடையிடையே வரிசையாகப் பயிர்கள் வளர்க்கப்படும். மூடுபடையை - சேதனப்பசளையாக மண்ணுடன் கலந்து விடாமல், உயிர் மூடுபடையையும் அதன் இறந்த பகுதிகளையும் (வளர்ச்சியைக் கட்டுப்படுத்துகையில்) மூடுபடையாக மண் மேற்பரப்பிலேயே விடுதல், மண் அரிப்பைத் தடுப்பதற்கான மிகச்சிறந்த முறையாகும். (தொடரும்...)

கலாநிதி வை.அருள்நந்தி
தகவல் தொடர்பு மையம். (மாணவர் பகுதி)
விவசாயபீடம். யாழ். பல்கலைக்கழகம்.


# தொழில் வங்கி



| நிறுவனம் | சமூக சேவைகள் திணைக்களம் நுகேகொட | Leo Burnett Solutions Inc. Colombo - 03. |
|---|---|---|
| வெற்றிடமாகவுள்ள பதவிகள் | 1. பார்வையற்றவர்களுக்கான ஆடைகள் தயாரிப்பு போதனாசிரியா்.<br>2. தொலைசேி இயக்குநர். (பார்வையற்றவர்).<br>3. அபிவிருத்தி உத்தியோகத்தர். (பார்வையற்றவர்). | பிரதி எழுதுபவர் (Copy writer) |
| அடிப்படைத் தகுதி | 1. இத்துறை சார்ந்த சான்றிதழ். 21 - 45 வயதெல்லை. அரச சேவை - வயதெல்லை இல்லை. க.பொ.த. (சாதாரணம்). 6 பாட சித்திகளுள் 4 திறமைச் சித்தி.<br>2. தொலைபேசி விசைப்பலகை பயிற்சி. 21 - 45 வயதெல்லை. அரசசேவை - வயதெல்லை இல்லை. 8 ஆம் ஆண்டு சித்தி ஆகக்குறைந்தது.<br>3. பட்டதாரி. 21 - 45 வயதெல்லை. அரச சேவை - வயதெல்லை இல்லை. | தமிழ் எழுத்துப் புலமை |
| விண்ணப்ப முடிவு திகதி | 19.09.2003 | 11.09.2003 |

தொழில் வங்கி தொடர்பான மேலதிக தகவல்களைப்பெற விரும்புவோர் - 'நமது ஈழநாடு' அலுவலகத்தில் நேரில் வந்து பார்வையிடலாம்.

# தகவல் தொழில்நுட்பத்தின் மையமாக

**கலயுகம் என்பது மாறி இன்று கணினியுகம் என்னும் நிலை உருவாகிவிட்டது. எங்கும் எதிலும் கணினியின் ஆதிக்கம் வியாபித்து விட்டது. ஈமெயில், இன்டர்நெட் என இன்று உலகம் கையளவிற்குள் சுருங்கி வந்துவிட்டது. இந்த நிலையில், யாழ்.குடாநாட்டைப் பொறுத்தவரையில் பல அரச, தனியார் கணினி நிறுவனங்கள் - தகவல் தொழில்நுட்பக் கல்வியை போதித்து வருகின்றன. அத்தகைய நிறுவனங்களுள் ஒன்றாக விளங்கும் ஐஐஎஸ் (IIS - Institute of Infomatics Studies) நிறுவன இயக்குநர் கே.விக்கினேஸுடனான நேர்காணல்...**

**யாழ். நகரில் தகவல் தொழிநுட்பத்தில் தனித்துவம் மிக்க நிறுவனமாக விளங்கிவரும் நீங்கள், கடந்து வந்த பாதையைக் கூறுவீர்களா?**

1995 ஆம் ஆண்டின் பிற்பகுதி எமது வரலாற்றில் மறக்கமுடியாத காலப்பகுதியாகும். இந்தக் காலகட்டத்தில் - வலிகாம மக்கள் அனைவரும் தமது அனைத்து சொத்துக்களையும் இழந்து, வடமராட்சி, தென்மராட்சிப் பகுதிகளில் இடம்பெயர்ந்து வாழ்ந்து வந்தனர்.

எதிர்காலமே சூனியமாகிவிட்ட நிலையிலுள்ள மக்கள் மத்தியில், எமது பாரம்பரியச் சொத்தான கல்வியின் மீது அக்கறை கொண்ட ஆர்வலர்கள் சிலரது தூண்டு தலால், தகவல் தொழில்நுட்பத் துறையில் எனக்கிருந்த அனுபவத்தினைப் பயன்படுத்தி, எனது நண்பர் ஒருவரின் உதவியுடன் - வரமராட்சி மண்ணில் 1996 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 4 ஆம் திகதி **IIS** நிறுவனத்தை ஆரம்பித்தேன். இந்த நிறுவனத்தை ஆரம்பிப்பதற்கு முன்- வட்டுக்கோட்டை தொழில் நுட்பக் கல்லூரி, வடஇலங்கை தொழில்நுட்ப நிறுவனம், **UNICOCOMPUTER** நிறுவ்னம் போன்றவற்றில் விரிவுரையாளராக, பகுதிநேர விரிவுரையாளராகக் கடமையாற்றிய அனுபவம் இருந்தாலும், ஓரளவு தொழில்நுட்பத்துறை சார்ந்த அனுபவமும் அந்த நிறுவனங்களின் நிர்வாகக் கட்டமைப்புக்களின் முறையும், அவற்றில் இருந்த நிறைவான, குறைவான விடயங்களையும் மிகத்துல்லியமாக அறிந்து வைத்திருந்தமையால், எதிர் காலத்தில் எனது நிறுவனத்தினை இலக்குக்கேற்ப நகர்த்துவது சுலபமாக இருந்தது.

**உங்களுக்கு ஏற்பட்ட நிதித் தேவைகளை எவ்வாறு நிவர்த்தி செய்தீர்கள்?**

எமது நிறுவனத்தினை ஆரம்பிப்பதற்கு, எமது சொந்த முதலீட்டைப் பயன்படுத்திக் கொள்ளக்கூடியதாக இருந்த போதும், பல்வேறு சந்தர்ப்பங்களில் நிறுவனத்தை விஸ்தீரணப்படுத்துவதற்கு எமக்கு - வர்த்தக வங்கி யாழ்ப்பாணக் கிளையும், மக்கள் வங்கி கன்னாதிட்டிக் கிளையும் கைகொடுத்து உதவின.

இருப்பினும் ஏனைய மாவட்டங்களுக்கு வழங்கப்படும் நிதிவசதிகளைப்போன்று, எமது வங்கித்துறையினரும் இந்தச் சமாதானச் சூழ்நிலையில் பல்வேறு முயற்சிகளினை மேற்கொள்ள உதவவேண்டும் என எதிர்பார்க்கிறோம்.

**உங்களது எட்டு வருட செயற்பாட்டில் நீங்கள் சாதித்தவற்றைக் கூறமுடியுமா?**

கடந்த எட்டு வருடகால செயற்பாட்டின் மூலம் எமது நிறுவனத்தின் ஊடாக, சுமார் 6000 இற்கு மேற்பட்ட மாணவர்கள், தகவல் தொழில்நுட்ப அறிவினைப் பெற்று வெளியேறியிருக்கிறார்கள்.

குறிப்பாக - அரச, தனியார் நிறுவனங்களைச் சார்ந்த அதிகாரிகள், ஊழியர்கள் பெருமளவில் எமது நிறுவனத்தில் பயிற்சியை முடித்துக் கொண்டுள்ளார்கள். எமது நிறுவனம் - உள்நாட்டிலும், சர்வதேச ரீதியிலும் அங்கீகரிக்கப்பட்ட கற்கை நெறிகளினை நடத்திவருவதால், எமது மாணவர்கள் இலகுவாக சந்தர்ப்பங்களைத் தட்டிச்செல்கின்றார்கள்.

குறிப்பாக, வெளிநாடுகளில் உயர்கல்விக்கு விண்ணப்பிக்கும் மாணவர்களினால் சமர்ப்பிக்கப்படும் எமது சான்றிதழ்கள் முழுமையாக அங்கீகரிக்கப்படுவதுடன், இலகுவான முறையில் அனுமதியும் பெற்றுக்கொள்கின்றனர். யாழ். மாவட்டத்தில் இயங்கும் ஏனைய நிறுவனங்களுடன் ஒப்பிடும்போது, இதை எமது சாதனையாகவே கருதுகிறோம்.

மேலும் எமது மாணவர்கள்- யாழ். குடாநாட்டிலும், தென்பகுதியிலும் தகவல் தொழில் நுட்பத்துறையில் பல்வேறு பொறுப்பான பதவிகளினை வகித்துவருகிறார்கள். போட்டிப் பரீட்சைகளிலும், நேர்முகப் பரீட்சைகளிலும் தமது திறமைகளை நிரூபித்திருக்கிறார்கள். ஒப்பீட்டளவில், எமது மாணவர்களுக்கு சந்தர்ப்பங்கள் அதிகமாக இருப்பதைக் காணக்கூடியதாக இருக்கிறது. உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் பட்டப்படிப்பினை மேற்கொள்ளும் எமது நிறுவன- மாணவர்கள் - தகவல் தொழில் நுட்பத்துறையிலே சிறந்த பெறுபேறுகளினை ஈட்டிவருகிறார்கள். இவை எமக்கு மகிழ்ச்சியளிப்பதாகவும், பெருமையாகவும் கருதுகிறோம். கல்விச்சேவை



ஐ.ஐ.எஸ். நிறுவன இயக்குநர்
**கே. விக்கினேஸ்**

மட்டுமல்லாது, கடந்த எட்டு வருடங்களாக கணினி, கணினி உதிரிப்பாகங்களின் விற்பனை, அவற்றினைப் பழுது பார்த்தல், பராமரித்தல், கணினிகளுக்குத் தேவையான மென்பொருட்களினை எழுதி வழங்குதல் போன்ற தொழில்நுட்ப சேவைகளினையும் -அரச, தனியார் நிறுவனங்களுக்கும், தனிநபர்களுக்கும் வழங்கி வருகிறோம். இதன்மூலம், தகவல் தொழில் நுட்பத்துறையில் தென்பகுதியை எதிர்பார்த்திருக்கும் நிலையை மாற்றியமைத்திருக்கிறோம்.

**உங்கள் கல்விச்சேவையில் எவ்விதமான சவால்களுக்கு முகம் கொடுத்தீர்கள்?**

பொதுவாக வியாபார நிறுவனங்களுக்கு இடையில் அவ்வப்போது பிரச்சினைகள் தோன்றுவதும், அவற்றை வெற்றிகொள்வதும் நடைமுறையாகும். ஆனால், எம்மைப் பொறுத்தவரையில் ஆரம்பமே மிகச் சிக்கலானதாக அமைந்திருந்தது. பல்வேறுபட்ட சவால்களை ஏற்றுக்கொண்டு, அவற்றை வெற்றிகண்டோம். எமது இந்த எட்டுவருட கல்விச்சேவையின் பெரும்பகுதியை, போராட்ட காலத்திலேயே நகர்த்தியிருப்பதால், பல்வேறுபட்ட பிரச்சினைகளை எதிர்நோக்கவேண்டியிருந்தது. குறிப்பாக, எமது நிறுவனத்திற்குத் தேவையான கணினிகளையும், கணினி உதிரிப்பாகங்களையும் கொழும்பிலிருந்து கொண்டுவருவதற்கு இலங்கை அரசாங்கத்தினால் தடைசெய்யப்பட்டிருந்தது. அது மட்டுமன்றி எமது மாணவர்கள் - இளைஞர்கள், யுவதிகள் என்பதால், குறிப்பாக அந்தக் காலங்களில் பல்வேறு அரசியல் பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க வேண்டியதாயிற்று.

இவற்றைவிட அவ்வப்போது தொடங்கப்பட்ட போட்டி நிறுவனங்களின் செயற்பாடுகளை, எமது அங்கீகாரமுள்ள தரமான கண்ணியமான சேவையின் ஊடாக வெற்றிகரமாக எதிர்கொண்டோம்.

**உங்கள் நிறுவனத்தால் தற்பொழுது நடத்தப்பட்டுவரும் கற்கைநெறிகள் பற்றிக் கூறுவீர்களா?**

தகவல் தொழிநுட்பத்தில் மாணவர்கள் எத்துறையைத் தெரிவு செய்து படிக்க விரும்பினாலும், அதற்கு ஏற்ற வகையில் சுமார் 12 விதமான **Diploma** கற்கைநெறிகளினை அறிமுகப்படுத்தி இருக்கிறோம். மாணவர்கள் தாம் தெரிவு செய்யும்துறை, தமது கல்வித்தரம் என்பவற்றினை அடிப்படையாகக் கொண்டு, **Diploma** கற்கை நெறியினை தெரிவுசெய்து கொள்ளமுடியும்.

மேலும், வர்த்தகத்துறை சார்ந்த மாணவர்களுக்கு முழுமையான கணினி மயப்படுத்தப்பட்ட கணக்கியல் கற்கை நெறியான **EX Next Genaration** எனும் கற்கை நெறியினை அறிமுகப்படுத்தி இருக்கிறோம். இந்தக் கற்கை நெறியினை நடத்துவதற்குரிய அங்கீகாரம், இலங் கையின் வடக்குப் பகுதியில் எமக்கு மட்டுமே, இந்திய **TATA** நிறுவனத்தினால் வழங்கப்பட்டுள்ளது.

மேலும் தகவல் தொழில்நுட்பத்துறையில் பட்டக்கல்வியினை மேற்கொள்ள விரும்பும் மாணவர்களுக்கு, கொழும்புப் பல்கலைக்கழகத்தின் வெளிவாரிக் கற்கை நெறிக்கான **BIT (Bachelor of Infrmation Technology)** என்பதை அறிமுகப்படுத்தி, வெற்றிகரமாக நடத்தி வருகிறோம். இலங்கையில் மேற்படி கற்கை நெறியை நடத்தி முன்னணி வகிக்கும் நிறுவனங்களுள் ஒன்றாக, நாமும் விளங்குகின்றோம். இக்கற்கை நெறியின் அறிமுகமானது யாழ். மாவட்ட மாணவர்களுக்கு ஓர் வரப்பிரசாதமாகவே அமைந்துள்ளது.

**உங்களுக்கும் John Keells Institute இற்கும் இடையில் ஏற்பட்ட வியாபார ஒப்பந்தம் பற்றி ஏதாவது கூற முடியுமா?**

எமது முகாமையினால் மிக நுணுக்கமாக ஆராயப்பட்டு, வர்த்தகத்துறையில் இலங்கையில் தமக்கென மேற்கொள்ளப்பட்ட ஒரு தனித்துவமான இடத்தினைப் பேணிக் கொண்டிருக்கும் **John Keells** நிறுவனத்தின் - **John Keells Institute** உடன் செய்யப்பட்ட இந்த வியாபார ஒப்பந்தத்தினை, எமது முயற்சிக்குக் கிடைத்த ஒரு பெருவெற்றியாகக் கருதுகிறோம்.

இதன் மூலம் இங்கிலாந்து அரசாங்கத்தினது **Edexcel International** எனும் நிறுவனத்தினால் வழங்கப்படும் **HND (Higher National Diploma in Computing)** சான்றிதழ்களுக்கான கற்கை நெறியினை, யாழ். மாவட்ட மாணவர்கள் தமது சொந்த பிரதேசத்தில் இருந்தே, குறைந்த செலவில் மேற்கொள்ளமுடியும்.

இந்த **HND** கற்கை நெறியினை இலங்கையில் வடக்கு-கிழக்கில் மேற் கொள்ளக்கூடிய ஒரேயொரு நிறுவனம் - எமது நிறுவனம் என்பதில் பெருமையடைகிறேன்.

# எமது தேசத்தை உருவாக்க வேண்டும்

இந்த **HND** கற்கை நெறியினைப் பூர்த்திசெய்து கொள்ளும் மாணவர்கள் - சர்வதேச பல்கலைக்கழகங்களில், கணினித்துறையில் பட்டப்படிப்பினை மேற்கொள்ள விரும்புவதாயின், முதல் 2 வருடங்கள் விலக்களிக்கப்படுகிறது. இதன் மூலம் இறுதி வருடத்தினை மாத்திரம் பூர்த்தி செய்வதனூடாக, தகவல் தொழில் நுட்பத்துறையில் ஓர் பட்டதாரியாகலாம். இந்த இறுதி வருடத்தினை- இங்கிலாந்து, அவுஸ்திரேலியா, நியூஸிலாந்து, கனடா, அமெரிக்கா போன்ற நாடுகளில் அல்லது இலங்கையில் மேகொள்ளமுடியும்.

இந்தக் கற்கை நெறியினை மேற்கொள்வதனூடாக, தகவல தொழில் நுட்பத்துறையில் ஓர் தொழில்சார் வல்லுநராவது மட்டுமல்லாது, மாணவர்களிடையே ஆளுமை, அவர்களின் ஆங்கில மொழித்திறன் ஆகியவற்றையும் வளர்த்துகொள்ள முடிகிறது. **HND** கற்கைநெறி தொடர்பாக, ஒவ்வொரு பெற்றோரும் அறிந்து, தமது பிள்ளைகளுக்கு வளமான எதிர்காலத்தினை ஏற்படுத்திக் கொடுக்க முன்வரவேண்டும் என எதிர்பார்க்கிறோம்.

**இந்தத் துறையில் நீங்கள் எதைச் சாதிக்கவேண்டும் என்று நினைக்கிறீர்கள்?**

எமது பிரதேசத்தைப் பொறுத்தவரையில் எமது மக்களிடையே காணப்படுகின்ற அறிவு, ஆற்றல் என்பன எமக்கிருக்கின்ற ஓர் மிகப்பெரிய வளமாகும். இந்த வளத்தினைப் பயன்படுத்தி, அறிவுசார் பொருளாதாரக் கட்டமைப்பு ஒன்றினை உருவாக்கமுடியும்.


இந்த வளத்தினைத் தகவல் தொழில் நுட்பத்தின்பால் திசைதிருப்பி விடுவோமேயானால் இந்தியாவின் பெங்களூர், மைசூர் போன்று. தக்வல் தொழில் நுட்பத்துறையில் இலங்கையில் ஒரு முக்கிய நகரமாக எமது யாழ். மாவட்டத்தைக் கொண்டுவரமுடியும். இலங்கையின் தகவல் தொழில் நுட்பத்தின் மையமாக யாழ். மாவட்டத்தை விளங்க வைக்க வேண்டும் என்பதே எனது அவாவாகும்.

**புதிதாக தகவல் தொழில்நுட்பத்துறையில் நுழைய இருப்பவர்களுக்கு நீங்கள் கூற விரும்பும் அறிவுரை என்ன?**

கடந்த இரு தசாப்தங்களில் நடந்த போரினால், பொருளாதார ரீதியில் பெரிதும் பின்தங்கியிருக்கும் எமது பிரதேசத்தில், நாளைய எதிர்காலத்தைத் தகவல் தொழில் நுட்பத்துறையின் மூலம் கட்டியெழுப்பமுடியும். எனவே, நாம் அனைவரும் ஒன்று திரண்டு, தகவல் தொழில்நுட்ப அறிவு சார்ந்த ஒரு சமுதாய அமைப்பினை, இந்தத் தமிழ் மண் ணில் கட்டியெழுப்பப் பாடுபடவேண்டும் என்பதே எனது வேண்டுகோள்.

சந்திப்பு:
**எஸ்.ரி.மயில்வாகனம்.**

# குடாநாட்டு சந்தை நிலவரம்



| பொருட்கள் | சுன்னாகம் | சங்கானை | நெல்லியடி | யாழ்ப்பாணம் | மருதனார்மடம் | திருநெல்வேலி |
|---|---|---|---|---|---|---|
| பயிற்றங்காய் | 30/= | 30/= | 30/= | 60/= | 40/= | 35/= |
| வெண்டிக்காய் | 10/= | 07/= | 25/= | 25/= | 10/= | 20/= |
| உருளைக்கிழங்கு | 60/= | 70/= | 65/= | 65/= | 70/= | 65/= |
| கத்தரிக்காய் | 60/= | 50/= | 35/= | 50/= | 100/= | 70/= |
| பாகற்காய் | 30/= | 30/= | 20/= | 30/= | 50/= | 40/= |
| கரட் | 40/= | 40/= | 45/= | 60/= | 30/= | 60/= |
| பீற்றூட் | 15/= | 10/= | 20/= | 25/= | 20/= | 15/= |
| முருங்கைக்காய் | 50/= | 40/= | 30/= | 90/= | 50/= | 70/= |
| வெங்காயம் | 20/= | 20/= | 30/= | 30/= | 28/= | 28/= |
| பச்சை மிளகாய் | 50/= | 30/= | 20/= | 50/= | 50/= | 50/= |

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanadu.com

**சிந்தனைக்கு**

ஆற்றின் அளவு அறிந்து ஈக அதுபொருள்
போற்றி வழங்கும் நெறி

- திருக்குறள்

# நமது நோக்கு

## இரகசிய ஒப்பந்தம்

இந்திய இராணுவ அதிகாரிகளின் குழுவொன்று - இரகசிய பாதுகாப்பு ஒப்பந்தம் ஒன்றின் அடிப்படையில் இலங்கைப் படையினருக்கு உதவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

ஐந்துநாள் விஜயமாக கொழும்புக்கு வந்த இந்தியாவின் முப்படைகளையும் சேர்ந்த அதிகாரிகள், இலங்கைப் படையினருக்கு உதவுவதற்கான நடவடிக்கைகள் திட்டம் குறித்த விரிவான ஆய்வுகளில் ஈடுபட்டுள்ளனர்.

குறிப்பாக சீனன்குடா விமானத்தளம், தியத்தலாவ இராணுவப் பயிற்சிக் கல்லூரி, திருகோணமலை கடற்படைத்தளம் ஆகியவற்றின் தரத்தை மேம்படுத்துவது தொடர்பான திட்டங்களையே இவர்கள் ஆராய்ந்துள்ளனர்.

இலங்கையின் இராணுவக் கட்டமைப்புக்களை உறுதிப்படுத்தும் நடவடிக்கைகளை சர்வதேச இராணுவ நிபுணர்களின் துணையுடன் மேற்கொண்டுவரும் அரசாங்கம், இதன் ஒரு கட்டமாகவே - இந்திய இராணுவ நிபுணர்களின் ஆலோசனைகளையும் பெற்றிருக்கிறது.

இதற்கு முன்னர் - இந்தியாவின் முன்னாள் இராணுவ அதிகாரி ஜெனரல் சதீஷ் நம்பியார், பிரித்தானிய முன்னாள் இராணுவ அதிகாரி ஜெனரல் மைக்கல் றோஸ் போன்றவர்களின் ஆலோசனைகளை அரசாங்கம் பெற்றிருந்தது.

இந்த ஆலோசனைகளின் அடிப்படையில் - இலங்கை இராணுவத்தின் அடிப்படைக் கட்டமைப்புக்களையே மாற்றம் செய்யவேண்டும் என்ற கருத்து முன் வைக்கப்பட்டிருந்தது. ஆனால், இந்த சிபார்சுகளை உடனடியாக நடைமுறைப்படுத்துவதற்கு ஏற்ற வழிமுறைகளைக் கையாளமுடியாத நிலையில்தான் அரசு உள்ளது.

இந்த நிலையில்தான் முப்படைகளினதும் அடிப்படைக் கட்டமைப்புக்களை மறுசீரமைப்பது, புனருத்தாரண உதவி நடவடிக்கைகளை மேற்கொள்வது உள்ளிட்ட விடயங்களை இந்திய படையதிகாரிகள் ஆராய்ந்துள்ளனர்.

இந்தியப் படையதிகாரிகளைப் பொறுத்தவரையில், இலங்கை படைகளின் இராணுவ ஆற்றலை அதிகரிப்புச் செய்வதற்கான நடவடிக்கையை மேற்கொள்வதுதான் அவர்களுக்கு இடப்பட்ட பணியா என்பது முற்றுமுழுதாகத் தெளிவாகாத நிலையே உள்ளது.

இலங்கை விவகாரத்தில் அரசியல் ரீதியாகக்கூட தலையீடு செய்யமாட்டோம் என அறிவித்திருந்த இந்தியா- அடிப்படையாக தனது இராணுவ உதவியையும், தலையீடுகளையும்கூட மேற்கொள்ள ஆரம்பித்திருக்கிறது.

இந்த இராணுவ ரீதியான உதவிகள் இரகசிய இராணுவ ஒத்துழைப்பு உடன்படிக்கை ஒன்றின் அடிப்படையில் இலங்கைப் படைகளுக்கு வழங்கப்பட்டிருக்கிறது. பகிரங்கமான ஒரு இராணுவ உதவியாக இதை இந்தியா வழங்கவில்லை.

அவ்வாறு பகிரங்கமாக இந்த இராணுவ உதவிகளை வழங்காமல், இரகசிய ஒப்பந்தம் ஒன்றின் அடிப்படையில் உதவிகளை வழங்குவதுதான் சந்தேகங்களுக்கு அடிப்படையாக அமைந்திருக்கிறது.

இவ்வாறு, இந்தியாவின் இராணுவ உதவிகளை சாதாரணமானதொரு செயற்பாடாக எவரும் கருதிவிட முடியாது. இந்தியாவைப் பொறுத்தவரையில், இலங்கையில் மீண்டும் இராணுவ ரீதியான தலையீடுகளுக்காக காத்திருக்கிறதோ, இல்லையோ கிடைக்கும் வாய்ப்புக்களை நழுவவிடுவதில்லை என்ற கொள்கையுடன் செயற்படுவதாகவே தெரிகிறது.

இந்திய இராணுவ அதிகாரிகள் முக்கியமாக விஜயம் செய்துள்ள தளங்களில் திருகோணமலையில் உள்ள கடற்படைத்தளம் மற்றும் சீனன்குடா விமானத்தளம் என்பன முக்கியமானவை.

திருகோணமலை துறைமுகம் மற்றும் அதனை அண்டிய பகுதிகளில் இந்தியாவின் கவனம் சமீபகாலமாக குவிந்து காணப்படுகிறது. சீனன்குடாவில் உள்ள எண்ணெய்த் தாங்கிகளை குத்தகைக்கு எடுத்துவரும் நிலையில், திருகோணமலைத் துறைமுகம் குறித்து இந்தியா கூடுதல் கவனம் செலுத்தியிருக்கிறது.

இந்தியாவைப் பொறுத்தவரையில் சீனன்குடாவின் பாதுகாப்பில் கவனம் செலுத்தவே இத்தகைய இரகசிய இராணுவ உதவிகளை வழங்கிவருகிறது.

இலங்கையில் மீண்டும் இந்தியா தனது இராணுவ தளங்களை விரிவுபடுத்துகின்ற அதேவேளை, இந்தியாவுக்கு அரசுத் தரப்பு தெரிவித்துவரும் ஆதரவு, தமிழ்மக்களுக்குப் பாரிய சந்தேகங்களை தோற்றுவித்திருக்கிறது. இந்தியா தனது இராணுவ நிலைகளை விஸ்தரித்து வருவது தமிழ்மக்களுக்கு சந்தேகங்களை எழுப்புவது நியாயமானதே.

# தலா வருமானத்தில் ஜப்பானை விட இலங்கை 40 மடங்கு பின்னிற்கிறது

இலங்கை, ஜப்பான் நாடுகளின் தலா வருமானம் இருபதாம் நூற்றாண்டின் நடுப்பகுதியின் ஆரம்பத்தில் சமமாக இருந்தது. ஆனால், இன்று இலங்கையின் தலா வருமானம் 890 அமெ. டொலராகவுள்ளது. ஜப்பானின் தலா வருமானம் 32,000 அமெ. டொலரால் அதிகரித்துள்ளது. எனவே, எமது நாட்டைவிட, ஜப்பான் 40 மடங்கு முன்னணியில் உள்ளது.

நிதி மூலங்களை - வீதி, விமான நிலையங்கள், துறைமுகங்கள் போன்ற நிர்மாணங்களுக்குப் பயன்படுத்தாமல், அதற்கு பதிலாக, அரசியல் நோக்கங்களை அடைவதற்கு வீண்விரயமாக்கியதே, நாடு பின்னிற்கவேண்டிய நிலைமைக்குக் காரணமாகும்.

இவ்வாறு - விவசாய, கால்நடைகள், சமுர்த்தி அமைச்சர் எஸ்.பி. திஸநாயக்கா, களுத்துறை மாவட்டத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் தெரிவித்துள்ளார்.

மேலும், 12,000 மாணவர்களில் - 8000 மாணவர்கள், மாதாந்தம் ரூபா 1350 இற்கும் ரூபா 1600 இற்கும் இடைப்பட்ட மகாபொல உபகாரப்பணம் பெறுகின்றார்கள். இவர்களில், பெரும்பான்மையான மாணவர்கள் சாதாரண குடும்பங்களில் இருந்தே வருகின்றார்கள்.

தற்போதைய பிரதம மந்திரி ரணில் விக்கிரமசிங்க, எதிர்க்கட்சித் தலைவராக இருந்த காலத்தில் - எஸ்.பி.திஸநாயக்கவினால் உருவாக்கப்பட்ட சமுர்த்தி திட்டம், கிராமத்தில் வாழ்கின்ற மக்களிடையே மாற்றத்தைக் கொண்டு வந்ததா கவும், இன்றைய அரசை அமைப்பதற்கு - அது பேருதவியாக இருந்தாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

### குருநகர் கடற்பிரதேசத்தில்

## கரையொதுங்கிய மீன்பிடிப்படகை நேற்றுமுன்தினம் உரியவர் பெற்றார்!

மன்னாரிலிருந்து, குருநகர் கடற்கரையில் கரையொதுங்கிய மீன்பிடிப் படகினை, நேற்றுமுன்தினம் உரியவர் பெற்றுக் கொண்டார்.

கடந்த 27 ஆம் திகதி வெளியிணைப்பு இயந்திரம் பொருத்திய மீன்பிடிப்படகொன்று, குருநகர்க் கடற்பகுதியில் கரையொதுங்கியது. இது தொடர்பாக - யாழ்ப்பாணப் பொலிஸாருக்குக் கிடைத்த தகவலையடுத்து, அந்தப் படகினைப் பொலிஸார் நீதிமன்றில் கையளித்தனர்.

அந்தப் படகிற்கு உரியவர், நேற்றுமுன்தினம் யாழ். பொலிஸ் நிலையத்திற்கு சென்று, உரிய ஆதாரம் காட்டி படகினையும் இயந்திரத்தினையும் பெற்றுக்கொண்டார்.

இரவு நேரத்தொழிலில் ஈடுபட்டுக்கொண்டிருந்தபோது, மேற்படி படகு குருநகர் கடலில் கரையொதுங்கியதாகத் தெரியவருகிறது.

## உல்லாசப் பயணிகளின் வருகை அதிகரிக்கின்றது!

### அமைச்சர் காமினி லொக்குகே

போர்நிறுத்த உடன்படிக்கை அமுலுக்கு வந்தபின்னர், இலங்கைக்கு உல்லாசப் பயணிகளின் வருகை அதிகரித்துள்ளதாக, உல்லாசப் பயணத்துறை அமைச்சர் காமினி லொக்குகே தெரிவித்தார்.

உல்லாசப் பயணிகள் மூலம் - 2001 ஆம் ஆண்டு 211.1 மில்லியன் அமெரிக்க டொலர்களையும், 2002 ஆம் ஆண்டில் 253 மில்லியன் அமெரிக்க டொலர்களையும் வருமானமாகப் பெற்றுள்ளதாக அவர் தெரிவித்தார்.

இருந்தபோதிலும், எதிர்காலத்தில் உல்லாசப் பயணிகளின் எண்ணிக்கை 5 லட்சமாக அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதற்கேற்ப நாடளாவிய ரீதியில், பல உல்லாசப் பயண ஹோட்டல்களை அமைக்கவிருப்பதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார். தகவல் திணைக்களத்தில் இடம்பெற்ற செய்தியாளர்கள் மாநாட்டிலே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

# தொழில்நுட்பக் கல்வி வளர்ச்சிக்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படுகிறது!

### மூன்றாம் நிலைக் கல்வி அமைச்சர்

தொழில்நுட்பம் சார்ந்த கல்வியை மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றன என்று, மூன்றாம் நிலைக் கல்வி மற்றும் பயிற்சிநெறிகளுக்கான அமைச்சர் கபிர் காசிம் தெரிவித்தார்.

இதேவேளை - வேலைவாய்ப்பின்றியிருக்கும் இளைஞர், யுவதிகளின் - அபிலாஷைகளையும், தேவைகளையும் பூர்த்தி செய்யவேண்டிய கடப்பாடு, அரசுக்கு ஏற்பட்டிருக்கிறது. இதனால், பல்வேறு துறைகளில் தொழில் வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்கவேண்டிய நிலையிலுள்ளோம்.

எட்டாம் ஆண்டு கல்வி கற்ற மாணவ, மாணவிகள் தொழில் நுட்பக் கல்வி மூலம் - பல்கலைக்கழகம் சென்று, அங்கு தொழில்நுட்பப் பாடநெறிகளை முன்னெடுக்கும் வகையில் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுவருவதாக அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

## இராணுவச் சிப்பாய் சிறையில் தற்கொலை!

(கொழும்பு)

தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருந்த சிப்பாய் ஒருவர், சுருக்கிட்டுத் தற்கொலை செய்துகொண்டார். அண்மையில் கடவத்தை பொலிஸ் நிலையத்திலேயே, இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இந்தச் சம்பவம் பற்றித் தெரியவருவதாவது, மன்னாரில் கடமையாற்றும் இராணுவச் சிப்பாய் ஒருவர் - விடுமுறையில் வீட்டுக்கு வந்திருந்தார். அவர் சம்பவதினம் இரவு கடையொன்றினை உடைத்துத் திருடிய குற்றத்திற்காகப் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டார்.

தடுப்புக் காவலில் தன்னைப் போடவேண்டாம் எனவும், அது அவமானமாக இருப்பதாகவும் - இவர், பொலிஸாரிடம் கூறியுள்ளார். ஆனால், பொலிஸார் இதனைக் கேளாது இவரை கூட்டில் அடைத்தபோது - இடுப்புப்பட்டியினால் சுருக்கிட்டுத் தற்கொலை செய்துகொண்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கைதிகளைக் கூண்டில் இடும்போது - இடுப்புப்பட்டியைக் கழற்றவேண்டும் எனச் சட்டம் உள்ளது. இதனைக் கடைப்பிடிக்காத குற்றத்திற்காக, சம்பவதினம் கடமையில் இருந்த இரு பொலிஸார் பணியில் இருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## தொண்ணூறு மில்லியன் செலவில் யாழ்ப்பாணத்திற்கு புதிய நீதிமன்றம்

உலக வங்கியின் நிதியுதவியுடன், 90 மில்லியன் ரூபாவில் யாழ்ப்பாணத்தில் புதிதாக நீதிமன்றக் கட்டடத் தொகுதியொன்று விரைவில் அமைக்கப்படவுள்ளது.

இந்த நீதிமன்றக் கட்டடத் தொகுதியில் - நீதிவான் நீதிமன்றம், தொழில் நீதிமன்றம், மாவட்ட நீதிமன்றம், வர்த்தக நீதிமன்றம், மேன்முறையீட்டு நீதிமன்றம், மேல் நீதிமன்றம் என, சகல நீதிமன்றத் தொகுதிகளும் ஒன்றாக அமைக்கப்படவுள்ளதாக தெரியவருகிறது.

இந்த நீதிமன்றக் கட்டட வேலைப்பாடுகள், மிக விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளதாகத் தெரியவருகிறது. புதிதாக அமைக்கப்படவுள்ள நீதிமன்றத் தொகுதியில் - தற்போது ஒவ்வொரு இடத்திலுமுள்ள நீதிமன்றுகள் ஒன்றாக இணைக்கப்படுவதுடன், மக்களும் தமது தேவையினை ஒரே இடத்தில் பூர்த்தி செய்யக்கூடியதாகவும் இருக்கும்.

### நெல் கொள்வனவு தொடர்பான

## மோசடியை விசாரிக்க திறைசேரிக்கு உத்தரவு

(கொழும்பு)

பொலனறுவை கூட்டுறவுச் சங்கங்கள் மூலம், நெல் கொள்வனவில் மோசடி இடம்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. இது குறித்து, விரிவான விசாரணைகளை நடத்தும்படி பிரதமர் ரணில் விக்கிரமசிங்க - திறைசேரிக்கு உத்தரவிட்டார்.

அதேவேளை - இந்த விடயம் தொடர்பாக, ஏற்கனவே மேற்கொள்ளப்பட்ட விசாரணை அறிக்கையை அரசு ஏற்றுக் கொள்ளவில்லை எனவும் தெரியவருகிறது.

இந்த அறிக்கை - திட்டமிடல், திட்ட அமுலாக்கல் அமைச்சின் உணவு பாதுகாப்புக் குழுத்தலைவரிடம் கையளிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இந்த விசாரணையை திறைசேரி அதிகாரிகள் அடங்கிய குழுவினரே மேற்கொள்ளவேண்டுமெனவும், சரியான முறையிலேயே விசாரணைகள் முன்னெடுக்கப்படவேண்டும் ' என, பிரதமர் உத்தரவிட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## மின்சாரக் கட்டணங்கள் இவ்வருடம் அதிகரிக்காது!

### மின்சாரசபை வட்டாரங்கள் தகவல்

இந்த வருடத்திற்குள் மின்சாரக் கட்டண அதிகரிப்பு மேற்கொள்ளப்படமாட்டாது என, இலங்கை மின்சாரசபை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. கட்டண அதிகரிப்பு தொடர்பாக, பேச்சுவார்த்தைகள் இடம்பெற்று வருகின்றபோதும் - இந்த வருடத்திற்குள் கட்டண அதிகரிப்பை மேற்கொள்வது சாத்தியப்படாது எனவும், அந்த வட்டாரங்கள் தெரிவித்தன. அதேவேளை - தடையின்றி மின்சார விநியோகம் மேற்கொள்ளப்படும்போதே, கட்டண அதிகரிப்புத் தொடர்பாகப் பேசப்படும் என - மின்சக்தி, எரிசக்தி அமைச்சர் கரு ஜெயசூரிய தெரிவித்தார். தற்பொழுது எரிபொருள், தொலைபேசி, பஸ் கட்டணங்கள் அதிகரிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

## நாணய மாற்று விகிதம்

மத்திய வங்கியின் சர்வதேச நடவடிக்கைப் பணியகத்தால் நேற்று வெளியிடப்பட்ட அந்நியச் செலவாணிகளுக்கான நாணய மாற்று விகித விவரங்கள் வருமாறு:-

| | கொள்வனவு விலை (ரூ.ச.) | விற்பனை விலை (ரூ.ச.) |
|---|---|---|
| 1 அமெரிக்க டொலர் | 96.30 | 96.89 |
| 1 ஸ்ரேலிங் பவுண் | 150.48 | 151.90 |
| 1 யூரோ | 103.53 | 104.73 |
| 1 சுவிஸ் பிராங் | 67.44 | 68.57 |
| 1 அவுஸ்திரேலிய டொலர் | 61.07 | 62.08 |
| 1 ஜப்பானிய யென் | 00.82 | 00.83 |
| 1 சவூதி றியால் | 25.79 | 25.79 |

# குடியிருக்க நிலம் இல்லாது வேதனைப்படும் அப்பாவிகள்

தமிழ்மக்கள் எதிர்நோக்கிய, எதிர்நோக்கும் பல்வேறு இடர்பாடுகள் தொடர்பாக, உலக அரங்கிலே பேசப்பட்டு வருகிறது.

அவற்றிற்கான தீர்வுகள் முன் வைக்கப்பட்டும் வருகின்றன. ஆனால், அவை ஏற்றுக்கொள்ளப்படுமா என்பது கேள்விக்குறியான விடயமாகவே உள்ளது.

உயர் பாதுகாப்பு வலயங்கள், கடற்தொழில் பிரச்சினைகள் என்பன இவற்றுள் முக்கியத்துவம் கொடுத்துப் பேசப்படுகின்றன. இந்த இரண்டு விடயங்களிலுமே பெரும்பா



லான எமது மக்களின் அன்றாட தேவைகள் தங்கி நிற்கின்றன. அடிப்படை வாழ்வின் ஆதாரங்களும், அன்றாட ஜீவனோபாயம் எனப் பொதுமக்களின் வாழ்வாதாரப் பிரச்சினைகள் பிணைந்துள்ளன.

இந்த விடயங்கள் தொடர்பாகப் பாதிக்கப்பட்ட மக்கள் சமூகங்களும், பல்வேறு பொது அமைப்புக்களும், மக்கள் பிரதிநிதிகளும் அடிக்கடி ஆங்காங்கு பல்வேறு இடங்களிலும் குரலெழுப்பி வருகின்றார்கள். ஆனால், இது தீராத வியாதியாகவே தொடர்ந்தும் உள்ளது.

உயர் பாதுகாப்பு வலயங்களுக்குள் தமது குடியிருப்புக்களை இழந்த மக்களும், தொழில் வளங்களைப் பறி கொடுத்த மக்களும் - இன்று செய்வதறியாது ஒதுங்கி நிற்கின்ற நிலைமையே காணப்படுகிறது.

நாட்டிலே சமாதானத்தைக்கொண்டு வருவதற்கான பயணம் - ஒருபுறம் தொடர்ந்து கொண்டிருக்கிறது. மறுபுறம் சமாதானம் வந்துவிட்டது எனப் பலரும், தமது தொழில் துறைகளை அபிவிருத்தி செய்யும் நிலையும் காணப்படுகிறது.

இதேவேளை - பல ஆண்டுகளாகத் தென்னிலங்கையிலும், பிற பிரதேசங்களிலும் வாழ்ந்தவர்கள் - இன்றைய சூழலிலே மீண்டும் யாழ் மண்ணிற்குத் திரும்பி வந்து, அவர்கள் தமது சொந்தக் காணிகளுக்கு உரிமை கோருகின்றனர். அதில் எந்தவித பிழையுமில்லை.

அதேவேளை, புதிய காணிகளைக் கொள்வனவு செய்வதிலும் ஆர்வம் காட்டி வருகிறார்கள். இதனால், சில இடங்களில் ஏழைக்குடும்பங்கள் பல பாதிக்கக்கூடிய வாயப்பு உண்டாகி விடுகிறது.

இங்கு நாம் எதைக் குறிப்பிடுகிறோம் என்றால், தனியார் காணிகளில் அமைந்துள்ள நலன்புரிநிலையங்களில் வசிக்கும் மக்களின் வாழ்வியல் பிரச்சினையைத்தான். இவர்களின் குடியிருப்புக்கள் - உயர் பாதுகாப்பு வலயம் என்னும் போர்வைக்குள்ளே, இராணுவ வேலிக்குள் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது. இதனால், இவர்கள் தமது சொந்தக் காணிகளை இழந்ததோடு மட்டுமல்லாமல், தமது தொழில்களையும் பறிகொடுத்து, அன்றாட சீவியத்திற்கே அல்லாடிக்கொண்டிருக்கிறார்கள்.

இந்த நிலையில், அவர்களது நலன்புரி நிலையங்கள் அமைந்துள்ள காணிகளின் உரிமையாளர்கள் - அவர்களுக்குப் பல்வேறு நெருக்கடிகளைக் கொடுத்து வருகிறார்கள். குறிப்பிட்ட தவணைகளைக் கொடுத்து, அந்த தவணைக்குள் காணியை விட்டு வெளியேறி விடுமாறு நிர்ப்பந்திக்கிறார்கள். இதனால், என்ன செய்வது என்று தெரியாமல் விழித்து நிற்பதைத் தவிர, அந்த மக்களுக்கு வேறு வழியே தெரியவில்லை.

மல்லாகம் நீதிவான் முகாமில் வசிக்கும் மக்களை - அந்தக் காணி உரிமையாளர் வெளியேறுமாறு கேட்டிருக்கிறார். அங்கு வாழ்ந்த 68 குடும்பங்களும் செய்வதறியாது நிற்கின்றார்கள். அவர்களது குடியிருப்புக்கள் அனைத்துமே, இராணுவ வேலிக்குள்ளே. இதனால், தமது பரிதாபநிலைமையைத் தெளிவாகக் குறிப்பிட்டு, மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம் ஒரு முறைப்பாட்டைச் செய்துள்ளார்கள். இந்த முறைப்பாட்டின் தீர்விலேதான், அவர்களின் எதிர்காலமே தங்கியிருக்கிறது.

குருநகர்ப் பகுதியைச் சேர்ந்த ஏழு கடற்தொழிலாளர் குடும்பங்கள்- யாழ்ப்பாணம் பிரதான வீதியிலுள்ள தனியார் காணியொன்றில், தமது தற்காலிக குடிசைகளை அமைத்து வாழ்ந்து வருகிறார்கள். தற்போது அவர்களிற்குக் காணி உரிமையா



ளர்களினால் வெளியேறுமாறு நெருக்குதல் கொடுககப்பட்டுள்ளது. இவர்களது சொந்த காணிகளோ - குருநகர் பிரதேசத்தில் உயர் பாதுகாப்பு வலயத்திலே உள்ளடக்கப்பட்டுள்ளது. இந்தமாத இறுதிக்குள் காணியைவிட்டு வெளியேறும்படி, பொலிஸாரின் உதவி கொண்டு பணிக்கப்பட்டுள்ளது. இவர்களும் செயவதறியாத நிலையிலே, ஒப்புதல் கொடுத்து, கையெழுத்தும் இட்டுள்ளனர்.

எங்கே போவோம் நாம்? எனும் வினாவே இவர்கள் முன் இன்று விழுந்து கிடக்கிறது.

இதிலுள்ள முக்கியமான விடயம் என்னவென்றால், இந்த குறித்த காணிக்கு உரிமைகோரி, இதுவரை மூன்று பேர் வந்துவிட்டதாகவும் ஒரு தகவல் தெரிவிக்கிறது. ஆனால், எவரும் காணி உறுதிகளைக் காட்ட மறுத்துவிட்டார்கள். உண்மை நிலை புரியாதநிலையிலேயே, காணியைவிட்டு வெளியேற சம்மதம் கொடுத்துவிட்டார்கள் இந்த அப்பாவி மக்கள்.

அநேகமானோர் இங்கு வந்து, தமது காணிகளைத் திருத்தியமைதததுவிட்டு, தற்போதுள்ள சூழ்நிலையைப் பயன்படுத்தி, மிகப்பெறுமதியான விலைக்கு விற்றுவிடத் திட்டமிடுகிறார்கள். ஆனால், அப்பாவி பொதுமக்கள் பாதிக்கப்படுவதை கவனத்தில் கொள்ளத் தவறுகிறார்கள்.

இன்னும் ஒரிரு மாதத்திலே மழைகாலம் தொடங்கப்போகிறது. கைக் குழந்தைகளைச் சுமந்துகொண்டு எங்கே போவார்கள் இந்த மக்கள். தனியார் காணிகளில் இவர்களது தற்காலிகக் குடியிருப்புக்கள் அமைந்துள்ளமையால் - சர்வதேச, உள்ளூர், அரச சார்பற்ற நிறுவனங்களும் - இந்த மக்களிற்கு உதவிகளைச் செய்தவதற்கு ஒருபடி பின்தள்ளியே நிற்கிறார்கள்.

இவ்விடயம் தொடர்பாகப் பல்வேறு இடங்களில் ஆராயப்பட்டு வருகிறது. பாடசாலைகளிலுள்ள வெறும் காணிகள், கோயில்கள், அரசிற்குச் சொந்தமான காணிகளில் இவர்கள் குடியிருத்தப்படக்கூடிய சூழ்நிலை உருவாக்கப்படலாம்.

இது தொடர்பாகச் சம்பந்தப்பட்ட தரப்பினர்கள் உடன விரைந்து நடவடிக்கை எடுக்கவேண்டியது இன்று காலத்தின் தேவையாக உள்ளது!


இ.சுதந்திரன்



செய்திக் கட்டுரை

# மக்களின் போக்குவரத்துக்கு தம்பனை வீதி புனரமைக்கப்படுமா?

**வ**லிகாமப் பிரதேசத்தின் பல சிற்றூர்களை இணைக்கும் இரண்டு கிலோ மீற்றர் நீளமான தம்பனை



திருத்தப்படாத பாலம்

வீதி, இன்று பயன்பாட்டிற்கு உதவாத வகையிலேயே காணப்படுகிறது. அதாவது, ஒருவருடத்தில குறிப்பிட்ட காலப்பகுதியில் மட்டுமே பயன்படுத்தக்கூடிய வீதியாக இது இன்று உள்ளது.

மாரிகாலம் ஆரம்பித்து விட்டால்- இந்த வீதியை முற்றாகவே பயன்படுத்த முடியாதநிலைமையே காணப்படும். மழை இல்லாத நேரங்களில்கூட, ஏறி இறங்கித்தான் போக்குவரத்தினை மேற்கொள்ள வேண்டிய சூழ்நிலை காணப்படுகிறது.

இந்த வீதி சண்டிலிப்பாய்ப் பிரதேசத்தில், கல்வளை - ஆலங்குளாய் வீதியில் இருந்து பிரிந்து செல்கிறது. இந்த வீதியானது - மருதனாமடம், கந்தரோடை, சுன்னாகம் போன்ற பல பகுதிகளுக்குக் குறுகிய நேரத்தில் செல்லக்கூடிய மார்க்கமாகவுள்ளது. இருந்தும், இந்த வதியால் மக்களுக்கு எவ்வித பயனும் இல்லாமலேயே இருக்கிறது.

யாழ்ப்பாணத்தின் முக்கிய ஆறுகளுள் ஒன்றான வழுக்கியாறு, இந்த வதியைக் குறுக்கறுத்தே செல்கிறது. இந்த இடத்திலே பாலம் ஒன்று 1988 ஆம் ஆண்டு அமைக்கப்பட்டது.

ஆனால், இதனுடைய வேலைகள் இன்னும் முற்றாக பூர்த்தியடையாத நிலையிலேயே காணப்படுகிறது. ஏறக்குறைய பதினைந்து ஆண்டுகளாக இந்த பாலத்தின் வேலைத் திட்டங்கள் பூர்த்தியடையாமலுள்ள காரணத்தினால், மக்கள் போக்குவரத்தின்போது பெரும் சிரமங்களை எதிர்நோக்க வேண்டியுள்ளது.

இந்த தம்பளை வீதியானது, அநேகமான வயல் வெளிகளை ஊடறுத்துச் செல்வதனால், விவசாயிகளுக்குப் பெரிதும் உதவியாக உள்ளது. உற்பத்திப் பொருட்களைச் சந்தைப்படுத்துவதற்கும், உற்பத்திக்குவேண்டிய மூலப்பொருட்களைக் கொண்டு வருவதற்கும் இலகுவான மார்க்கமாக இப்பாதை உள்ளது.

யாழ்ப்பாணத்தில் பிரதான சந்தைகளாகிய மருதனார்மடம், சுன்னாகம் ஆகிய சந்தைகளிற்கு, மிக விரைவாகச் செல்லக்கூடிய குறுகிய வழியாகவும் இவ்வீதி காணப்படுகின்றமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

விவசாயிகள் தவிர, அரச ஊழியர்கள், மாணவர்கள் எனப் பலரும் இவ்வீதியைப் பாவித்து வருகிறார்கள். கந்தரோடை ஸ்கந்தவரோதயா கல்லூரிக்கு மிகவிரைவாகச் செல்லக்கூடிய பாதையாக இந்தப் பாதையுள்ளது. மாரிகாலம் ஆரம்பித்துவிட்டால், இவ் வதியைப் பயன்படுத்த முடியாதுள்ளதால், மாணவர்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

இதேவேளை - பெரும் வேதனை தரக்கூடிய விடயம் என்னவெனில்- முன்னர் இருபது அடி அகலமாக இருந்த இந்தப் பாதையானது, தற்போது சில இடங்களில் பத்து அடி அகலமாகவே உள்ளது.

விவசாயிகள் - தமது எல்லை வரம்புகளை அகலமாக்கி வருவதாலேயே, இந்தநிலை உருவாகியுள்ளது. எதிர்காலத்தில் முற்றாகவே வீதி இல்லாமல் போய்விடும் அபாயம் ஏற்படலாம்.

இந்த வீதியின் இடையே ஒரு மயானமும் அமைந்துள்ளது. இதற்குச் செல்லும் மக்களும் பெரும் இடர்பாடுகளை எதிர்நோக்குகின்றனர்.

இந்த வீதி எவ்வளவு வேகமாக, உரிய தரப்பினரால் புனரமைக்கப்படுகிறதோ, அவ்வளவுக்கு நன்மை பயக்கும் விடயமாகவே இருக்கும்.




தம்பனை வீதி

அதேவேளை - வீதி சீரின்மையால், வழுக்கியாற்றுப் பகுதிகளையும் மக்கள் வீதியாகப் பயன்படுத்துவதனால், வாய்க்கால்களும் சிதைவடைந்து, நீர்வரும் காலங்களில் அநியாயமாக விரயமாவதும் வேதனைக்குரிய வியடமாகும்.

இரா.விஜேந்திரன்

### இஸ்ரேலுடனான பேச்சுவார்த்தை தொடர்பாக

# நாடாளுமன்ற உறுப்பினர்களின் கருத்தறிய அபாஸ் தீர்மானம்!



இஸ்ரேல் - பலஸ்தீனிய பேச்சுவார்த்தை தொடர்பாக, நாடாளுமன்ற உறுப்பினர்களின் கருத்துக்களை அறிந்து கொள்வதற்கு, பலஸஸ்தீனியப் பிரதமர் மொஹமட் அபாஸ் தீர்மானித்துள்ளார்.

பேச்சுவார்த்தை தொடர்பான அபாஸின் கருத்துக்களை நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஏற்றுக்கொள்ளாவிட்டால், அவரை பதவி விலகுமாறு கேட்கவுள்ளதாக, பலஸ்தீனத்தின் தகவல் அமைச்சர் நபீல் அமிர் தெரிவித்திருக்கிறார்.

இதேவேளை -

பலஸ்தீனத் தலைவர் அரபாத்துக்கும் பிரதமர் அபாஸுக்கும் இடையிலான முரண்டுபாடுகள் வலுவடைந்துவருகின்றன.

இஸ்ரேலுடனான பேச்சுவார்த்தைகள் முடிவடைந்து விட்டதாக அரபாத் அறிவித்திருக்கிறார்.

பலஸ்தீனத் தலைவர் யஸீர் அரபாத்தை பதவி விலகுமாறு இஸ்ரேல் பாதுகாப்பு அமைச்சர் சயூஸ் மொபாஸ் கோரியிருப்பது குறிப்பிடத்தக்கது.

# ஆர்ஜென்ரீன குண்டுவெடிப்புத் தொடர்பாக ஈரான் முன்னாள் தூதர் பிரிட்டனில் கைது!



ஆர்ஜென்ரீனாவில், யூதர்கள் வாழும் பகுதியான புவனஸ் அ்யர்ஸில் இல் இடம்பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவம் தொடர்பாக, ஆர்ஜென்ரினாவுக்கான முன்னாள் ஈரானியத் தூதுவர் சொலிமன்பூர் கைதுசெய்யப்பட்டார்.

பிரிட்டிஷ் இராஜதந்திரியாகக் கடமையாற்றி வருகின்ற வேளையிலேயே இவர் கைதுசெய்யப்பட்டிருக்கிறார்.

இவர் கைதுசெய்யப்பட்டதைத் தடுக்கத் தவறியமைக்காக, பிரித்தானியாவுக்கான ஈரானியத் தூதுவர் சர்மாடி, தற்காலிகமாக ஈரானுக்கு திருப்பி அழைக்கப்பட்டிருக்கிறார்.

இச்சம்பவத்தை அடுத்து, ஈரானிலுள்ள பிரித்தானிய தூதுவராலயம் மீது பலத்த துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டதால் அது மூடப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்டிருக்கும் சொலிமன்பூர் விடுவிக்கப்பட வேண்டும் எனவும், பிரித்தானியா மன்னிப்புக்கோரவேண்டும் எனவும் ஈரானிய ஜனாதிபதி மொஹமட் கடாபி கேட்டிருக்கிறார். ஆனால், சட்டப் பிரச்சினையில் தாம் தலையிடப்போவதில்லையெனவும் அவர் தெரிவித்திருக்கிறார்.

### ஈராக்கில் வெளிநாடுகளின் படைகள்:

# ஐ.நா.பாதுகாப்புச் சபையின் அனுமதியைப் பெற முயற்சி!



ஈராக்கிற்கான தனது படையினரின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கான அனுமதியை, ஐக்கிய நாடுகள் சபையிடன் அமெரிக்கா கேட்டிருக்கிறது.

உலக நாடுகளின் படைகளை ஈராக்கில் சேவையாற்ற அழைப்பதற்கும் ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்புக் கவுன்ஸிலின் அனுமதியைப் பெற்றுக்கொள்வதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

ஆட்சி அதிகாரங்களை ஈராக்கியரிடம் வழங்குவதற்கும், உலக நாடுகளின் படைகளை அங்கு கடமையில் ஈடுபடுத்தவும் ஈராக்கின் மீள் கட்டுமானப் பணிக்குத் தேவையான நிதியை சேகரித்துக் கொள்ளவும் ஐக்கிய நாடுகள் சபையின் உதவி தேவைப்படுவதாக அமெரிக்கா கருதுகின்றது.

ஈராக்கில் உள்ள அமெரிக்க கூட்டுப்படைகள் மீது தாக்குதல்கள் அதிகரித்துள்ள நேரத்தில், அமெரிக்கா இத்தீர்மானத்துக்கு வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

தமது மக்களின் பாதுகாப்பிற்கு ஆயுதம் தரித்த படையொன்றை உருவாக்குதல் அவசியமென ஈராக்கிய ஆளும் கவுன்ஸில் கோரிக்கை விடுத்துள்ளது.

அமெரிக்க அனுசரணையுடன் ஈராக்கிய ஆளும் கவுன்ஸிலுக்கு கூடிய அதிகாரம் வழங்க வேண்டும் என, ஈராக்கிற்கான அமெரிக்காவின் நிர்வாக அதிகாரி "போல் பிரிமர் கேட்டுள்ளார். ஆனால், பலப்படுத்தப்பட்ட படையொன்று அங்கு நிலைத்திருக்கும் என வெள்ளை மாளிகை தெரிவித்துள்ளது.

# பிரிட்டனுக்கான பிரஜாவுரிமைக்கு விண்ணப்பிப்போருக்கு வகுப்புகள்!

பிரிட்டனில் பிராஜாவுரிமை பெற விண்ணப்பம் செய்பவர்கள், ஆங்கிலமொழி பரீட்சையொன்றில் சித்தியடைதல் அவசியம் என்ற கருத்து நாடாளுமன்றில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

அடுத்த ஆண்டில் ஆங்கில மொழி, பிரஜாவுரிமை சம்பந்தமான வகுப்புக்களை பிரிட்டிஷ் அரசாங்கம் நடத்தவிருப்பதை, அந்நாட்டு இராஜாங்க அமைச்சர் டேவிட் பிளெங்கெட் வரவேற்றுள்ளார்.

அங்கு வாழும் வெளிநாட்டவர்கள், பிரிட்டன் மக்களுடன் நல்ல தொடர்புகளை ஏற்படுத்த இது வழி வகுக்கும் எனவும் அவர் தெரிவித்தார்.

இப்பரீட்சையில் சித்தியடையத் தவறுபவர்கள், பிரிட்டனுக்கான கடவுச் சீட்டைப் பெறுவதற்கும் தேர்தல்களில் வாக்களிப்பதற்கும் உரிமையற்றவர்கள் எனத் தெரிவித்த டேவிட் பிளாங்கெட்,

இனங்களுக்கிடையே தொடர்பை வளர்ப்பதால், இனங்கள் தொடர்பான வன்முறைகளைத் தவிர்த்துக் கொள்ள முடியுமெனவும் தெரிவித்தார்.

### உலகவலம்


# பிரிட்டனிடமிருந்து போர் விமானங்களை கொள்வனவு செய்ய இந்தியா தீர்மானம்!

பிரிட்டனிடமிருந்து 66 ஹோக் ரக யுத்த விமானங்களைக் கொள்வனவு செய்வது பற்றி இந்தியப் பிரதமர் அடல் பிஹாரி வாஜ்பாய் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

இந்த விமானங்களைக் கொள்வனவு செய்வதற்கு பல ஆண்டுகளாக இந்தியா முயற்சி செய்துவந்தது.

விமானிகளின் தவறுகள் காரணமாக, யுத்த விமானங்கள் பலவற்றை இழந்துள்ள இந்தியா, 1.3 பில்லியன் டொலர் செலவில் புதிதாக விமானங்களைக் கொள்வனவு செய்யவுள்ளது.

நவீன ரக போர்விமானங்களையும், பயிற்சி விமானங்களையும் வாங்குவதற்கு, 1985 ஆம் ஆண்டில் இருந்து இந்தியா முயற்சி செய்துவருகின்றமை குறிப்பிடத்தக்கது.




## முதலாம் ஆண்டு நிறைவையொட்டி

நமது ஈழநாடு
தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்
நடாத்தும்

## பாடசாலை மாணவர்களுக்கான கட்டுரைப்போட்டி

*உயர்தரப் பிரிவு* - (க.பொ.த. உயர்தர வகுப்பு மாணவர்கள்)

*தலைப்பு* - '21 ஆம் நூற்றாண்டில் அறிவியலின் வளர்ச்சி'

முதலாம் பரிசு - ரூபா 3,000
இரண்டாம் பரிசு - ரூபா 2,000
மூன்றாவது பரிசு - ரூபா 1,000

*கீழ்ப் பிரிவு* - (க.பொ.த. சாதாரண தரமும் அதற்குக் கீழ் கற்பவர்களும்)

*தலைப்பு* - 'சூழல் மாசடைதலைத் தடுப்பதில் நமது பங்கு'

முதலாம் பரிசு - ரூபா 3,000
இரண்டாம் பரிசு - ரூபா 2,000
மூன்றாவது பரிசு - ரூபா 1,000

நிபந்தனைகள்

- கட்டுரைகள் சொந்த ஆக்கமாக இருத்தல் வேண்டும்.
- கட்டுரைகள் அனுப்பும் போது பாடசாலையில் கற்கும் தரம் குறிப்பிடப்பட்டு, அதிபரால் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.
- கட்டுரைகள் ஆகக் குறைந்தது 300 சொற்களுக்குக் குறையாமல் இருத்தல் வேண்டும்.
- கட்டுரைகளைத் தேர்ந்தெடுப்பதில் நடுவர்குழுவினது ஆசிரியரின் முடிவே இறுதியான்து.
- கட்டுரைகள் "நமது ஈழநாடு" 267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பிவைக்கப்படவேண்டும்.

போட்டி முடிவுதிகதி - 10.09.2003

நமது ஈழநாடு
தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

## ஓராண்டு நிறைவையொட்டி நடத்தப்படும் சிறுகதை; கவிதைப் போட்டிகள்

சிறுகதை - முதலாம் பரிசு - 6,000 ரூபா
இரண்டாம் பரிசு - 4,000 ரூபா
மூன்றாவது பரிசு - 2,000 ரூபா

கவிதை - முதலாம் பரிசு - 6,000 ரூபா
இரண்டாம் பரிசு - 4,000 ரூபா
மூன்றாவது பரிசு - 2,000 ரூபா

நிபந்தனைகள்

- எழுதுபவரின் சொந்த ஆக்கமாக இருக்க வேண்டும். ஏற்கனவே பத்திரிகையிலோ, ஏனைய ஊடகங்களிலோ வெளிவராதவையாக இருக்க வேண்டும்.
- மொழிபெயர்ப்பு ஆக்கங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.
- கதைகள் ஈழநாடு பத்திரிகையின் ஒரு பக்கத்துக்குள் அடங்குவதாக இருக்கவேண்டும். தட்டச்சில் பொறிக்கப்பட்டவையாக இருந்தால் 5 பக்கங்களுக்குள்ளும் கையால எழுதப்பட்டதானால் 7 பக்கங்களுக்குள்ளும் இருத்தல் வேண்டும்.
- கதைகள், கவிதைகள் சமகால, சமூகப் பிரச்சினைகளை மையமாக வைத்து எழுதப்படல் வேண்டும்.
- ஆக்கங்கள் யாவும் 10.09.2003 ஆம் திகதிக்குள் "நமது ஈழநாடு" 267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கப்பட்வேண்டும்.
- நமது ஈழநாடு பத்திரிகையில் கடமைபுரிபவர்களோ, அவர்கள் குடும்பத்தவர்களோ இப்போட்டியில் பங்குபற்ற முடியாது.
- பரிசுக்குரிய ஆக்கங்களை தேர்வு செய்வது நடுவர் குழுவினதும், ஆசிரியரினதும் முடிவாகும்.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# சமாதான பேச்சுவார்த்தை ஆரம்பிக்கப்பட்டால் வட-கிழக்கு அபிவிருத்திக்கு நிதிவழங்க முடியும்

## சர்வதேச ஒத்துழைப்புக்கான ஜப்பானிய வங்கி

(கொழும்பு)

விடுதலைப் புலிகளுக்கும், அரசாங்கத்துக்கும் இடையில் சமாதானப் பேச்சுக்களை மீண்டும் ஆரம்பித்தால், வடக்கு - கிழக்கில் முழுமையான அபிவிருத்தியை மேற்கொள்வதற்கான நிதியுதவியினை வழங்கமுடியுமென, சர்வதேச ஒத்துழைப்புக்கான ஜப்பானிய வங்கி வெளியிட்டுள்ள அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளது.

மேற்படி வங்கியின் பிரதிநிதியான சுட்சுசிக்கோ அகாஷி, வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்தார்.

இது தொடர்பாக, அந்த அமைப்பு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

நாட்டில் நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்துவதற்காக, அரசு - விடுதலைப் புலிகள் மீண்டும் சமாதானப் பேச்சை ஆரம்பிக்கவேண்டும். இதன் மூலம் நாட்டில் நிரந்தர சமாதானம் ஏற்படுமானால், வடக்கு - கிழக்கில் யுத்தத்தினால் அழிந்துள்ள பிரதேசங்களில் அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்ளமுடியும். இதற்காக பெருமளவிலான நிதியை முதலீடு செய்வதற்கு, சர்வதேச ஒத்துழைப்புக்கான ஜப்பான் வங்கி தயாராக இருக்கின்றது.

இவ்வாறு அந்த வங்கி வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(01)



இலங்கை பொலிஸ் சேவையின் 137 ஆவது ஆண்டு நிறைவு விழா பொலிஸ் பார்க் மைதானத்தில் நேற்றுக் கொண்டாடப்பட்டது. இவ்விழாவில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்ட பொலிஸ் மா அதிபர் ரி.ஈ.ஆனந்தராஜா அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக்கொள்வதைப் படத்தில் காணலாம்.

## கசிப்பு விற்றவர்களுக்கு அபராதம் விதிப்பு!

(யாழ்ப்பாணம்)

சட்டவிரோத சாராயம் விற்பனை செய்த குற்றத்திற்காக மூவருக்கு, நேற்று யாழ்.நீதிமன்றால் அபராதம் விதிக்கப்பட்டது.

ஊரெழு கிழக்கைச் சேர்ந்த ஒருவருக்கு - 10,000 ரூபா தண்டப்பணமும், 200 ரூபா தர்மப்பணமும், கொக்குவில் மேற்கைச் சேர்ந்த ஒருவருக்கு- 2,500 ரூபா தண்டப்பணமும், 2,000 ரூபா தர்மப்பணமும், கொக்குவில் கிழக்கைச் சேர்ந்த ஒருவருக்கு- 2,000 ரூபா தண்டப்பணமும் விதிக்கப்பட்டது. அதேவேளை சட்டவிரோதமாக கசிப்பு உற்பத்தி செய்த குற்றத்திற்காக, யாழ்ப்பாணம் நாவலர் வீதியைச் சேர்ந்த ஒருவருக்கு - 10,000 ரூபா தண்டப்பணமும், 2,000 ரூபா அபராதமாக விதிக்கப்பட்டது.

# உல்லாசப் பயணத்துறை அபிவிருத்திக்கு அனுமதி பெற்றுக் கொடுக்கப்படும்!

## அமைச்சர் காமினி லொக்குகே தெரிவிப்பு

உல்லாசப் பயணத்துறையை, வடக்கு - கிழக்கில் அபிவிருத்தி செய்ய விரும்புவோருக்கு - உல்லாசப பயணச் சபையிடமிருந்து அனுமதி பெற்றுக்கொடுக்கப்படும் என்று, அமைச்சர் காமினி லொக்குகே தெரிவித்தார்.

வடக்கு - கிழக்கில் சேதமாகிய உல்லாசப் பயணக் ஹோட்டல்களை- அபிவிருத்தி செய்யவும், புனரமைப்பு செய்யவும் அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருகின்றது என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

தனியார்துறையினர் இதற்கு முன்வந்தால், குறைந்த வட்டி வீதத்தில் கடன் பெற்றுக்கொடுக்கப்படும் என்றும் அமைச்சர் கூறினார்.

யாழ்ப்பாணத்தில் - ஞானம்ஸ், சுபாஸ் ஹோட்டல்களிலுள்ள இராணுவத்தினர் தங்குவதற்கு மாற்று இடமொன்று கிடைக்கப்பெற்றதும், இந்தக் ஹோட்டல்கள் மீளக்கையளிக்கப்படும் என்றும், அவர் சொன்னார்.

## பல்கலை அனுமதி மறுக்கப்பட்ட

# யாழ்ப்பாண மாணவன் உயர் நீதிமன்றில் வழக்கு

(யாழ்ப்பாணம்)

'Z' புள்ளி முறையால் பல்கலைக்கழக அனுமதி மறுக்கப்பட்ட மாணவர் ஒருவர், உயர்நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்துள்ளார்.

2001 ஆம் ஆண்டு க.பொ.த. உயர்தர வகுப்பில் கல்விகற்ற யாழ்ப்பாண இந்துக் கல்லூரி மாணவனான பி.பாலமயூரனே உயர்நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்துள்ளார்.

யாழ். மருத்துவபீடத்தில் கல்வி கற்பதற்கான தகைமைகளைத் தான் பெற்றிருந்தபோதும், 'Z' புள்ளி முறையால் - அதற்கான அனுமதி மறுக்கப்பட்டுள்ளது எனத் தெரிவித்தே, அவர் மனுவை தாக்கல் செய்துள்ளார்.

இந்த மனுவில் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு பிரதிவாதியாக குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேபோன்ற இரண்டு மனுக்கள் உயர் நீதிமன்றத்தால், ஏற்கனவே ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

## சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ்

# தனித்து போட்டியிடும் முடிவை கைவிடக் கோருகிறது ஐ.தே.க

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ், எதிர்வரும் மாகாணசபைத் தேர்தலில் தனித்து போட்டியிடும் முடிவை மறுபரிசீலனை செய்யுமாறு, ஐக்கிய தேசியக் கட்சி கேட்டுள்ளது.

தற்போது இரண்டு கட்சிகளுக்குமிடையே - முறுகல்நிலையினை தணிக்கும்முகமாக, பேச்சுவார்த்தைகள் நடைபெற்றுவருகின்றன.

இந்தப் பேச்சுக்களில் கலந்துகொள்ளும் முஸ்லிம் காங்கிரஸின் உறுப்பினர்களாக - ரவூப் ஹக்கீம், எம்.ரி.ஹசன் அலி, என்.எம்.சகீத், கே.ஏ.பாயிஸ், நிசாத் பதியுதீன், ராவுத்தர் நைனா, முகைதீன் ஆகியோர்களும் ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் - ஜோன் அமரதுங்க, மலிக் சமர விக்கிரமநாயக்க, மகிந்த சமரசிங்க, மிலிந்த மொறகொட, எம்.எச்.முஹமட், இம்தியாஸ் பாக்கீர் மாக்கர், ஏ.எச்.எம்.அஸ்வர் ஆகியோர் நியமிக்கப்பட்டனர்.

ஒவ்வொரு மாதமும் கூடி, இரு கட்சியினருக்குமிடையே உள்ள பிரச்சினைகளை பேசித்தீர்ப்பதே இவர்களது நோக்கமாகும், முதலாவது கூட்டம் எதிர்வரும் திங்கள் மாலை 3 மணிக்கு, ஐக்கிய தேசியக் கட்சியின் தேசிய அமைப்பாளர் மலிக் சமர விக்கிரமநாயக்கவின் காரியாலயத்தில் நடைபெறவுள்ளது.(07)

# இலவச கணினி பயிற்சி நிலையம் கிளிநொச்சியில் திறந்துவைப்பு!

(கிளிநொச்சி)

கிளிநொச்சியில் தமிழீழ மாணவர் அமைப்பினால், நேற்று மாலை இலவச கணினிப் பயிற்சி நிலையம் ஒன்று திறந்து வைக்கப்பட்டது.

தமிழீழ மாணவர் அமைப்பின் துணைப்பொறுப்பாளர் ஈழப்பிரியன் தலைமையில் நடந்த இந்த நிகழ்வில் - பொதுச்சுடரினை தமிழர் புனர்வாழ்வுக் கழக உதவி நிறைவேற்றுப் பணிப்பாளர் இனியவன் ஏற்றினார். தேசியக் கொடியினை தமிழீழ அரசியற்துறை துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன் ஏற்றினார்.

தொடர்ந்து மண்டபத்தினை சோ.தங்கன் திறந்து வைத்தார். கணினியினை எஸ்.இனியவன் இயக்கினார். அதன்பின் நடந்த நிகழ்வில்- எஸ்.இனியவனும், எஸ்.ராணிமைந்தனும் உரையாற்றினர். கணினிப் பயிற்சிப் பொறுப்பாசிரியர் ராகுலன் வகுப்புக்களை ஆரம்பித்தார்.

ஏற்கனவே - தருமபுரம், புதுக்குடியிருப்பு, பண்டிவிரிச்சான் பகுதிகளில் தமிழீழ மாணவர் அமைப்பினால், இலவச கணினி பயிற்சி வகுப்புகள் நடத்தப்படுவதுடன், அதில் நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் பயின்று வெளியேறியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# வைத்தியசாலைகளை இயக்க மூவாயிரம் மில்லியன் தேவை!

அரசாங்க வைத்தியசாலைகளை எதிர்காலத்தில் இலகுவாக இயக்குவதற்கு, மூவாயிரம் மில்லியன் ரூபா நிதி தேவைப்படும் என, சுகாதார அமைச்சர் பி.தயாரத்ன தெரிவித்துள்ளார்.

வைத்தியசாலைகளை நவீன வசதிக்கேற்ப பல்வேறு அபிவிருத்தி திட்டங்களை மேற்கொள்ளவே, இந்த நிதி தேவைப்படுவதாக அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

இதற்கான நிதியினை, திறைசேரி வழங்குமானால் - அரசாங்க வைத்தியசாலைகளை இலகுவாக இயக்க முடியும் என, அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

### முகமாலை...

இந்தச் சம்பவம் இடம்பெற்றது. பின்னர் இவர், கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டு, சுன்னாகம் காவற்துறை பணிமனைக்குக் கொண்டு செல்லப் பட்டு அதன்பின், படிவம் ஒன்றில் கையெழுத்து வாங்கிய பின் விடுதலை செய்யப்பட்டார் என்று தெரிவிக்கப்படுகிறது.

### 1லட்சம் ரூபா...

தெரிவித்து, அடிப்படை மனித உரிமை மீறல் வழக்கொன்றை உயர் நீதிமன்றில் தாக்கல் செய்திருந்த ஒன்பது மனுதாரர்களுக்கு, தலா ஒரு லட்சம் ரூபாவை அரசாங்கம் நஷ்டஈடாக வழங்கவேண்டும் என்று தீர்ப்பளிக்கப்பட்டிருக்கிறது.

வன்னிப் பிரதேசத்தைச் சேர்ந்த தேவராசா சிவகுமார் உள்ளிட்ட 9 வாக்காளர்களே இந்த அடிப்படை மனித உரிமை மீறல் மனுவைத் தாக்கல் செய்திருந்தனர்.

இந்த மனுவில் இராணுவத் தளபதி, தேர்தல் ஆணையாளர் உட்பட ஆறுபேர் பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்பட்டிருந்தனர்.

மார்க் பெர்னாண்டோ, அமிர் இஸ்மயில், சி.வி.விக்னேஸ்வரன் ஆகியோர் உள்ளிட்ட நீதியரசர்கள் இந்த மனு மீதான விசாரணையை மேற்கொண்டனர்.

## யாழ்.கல்வியியற் கல்லூரி மாணவர்கள்

# வெளி மாவட்டங்களுக்கு செல்ல வேண்டிய நிலை!

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியல் கல்லூரியில் கற்பிக்கப்பட்டு வந்த இருபாடநெறிகள் நிறுத்தப்பட்டுள்ளதால், யாழ்.மாணவர்கள் வெளி மாவட்டங்களுக்குச் செல்லவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

கணிதம், விஞ்ஞானம் ஆகிய பாடநெறிகளே நிறுத்தப்பட்டு, வர்த்தமானி அறிவித்தலும் வெளியிடப்பட்டுள்ளது. இங்கு இப்பாடநெறியைப் பயிலுபவர்களில் - 98 வீதமானோர் குடாநாட்டு மாணவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இது குறித்து, மாணவர் சமூகம் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களின் கனவத்திற்குகொண்டு வரவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# இத்தாலி செல்வதற்கு அனுமதிக்குமாறு விமானநிலையத்தில் மறியல் போராட்டம்

(கொழும்பு)

இத்தாலிக்கு செல்ல அனுமதிக்கக்கோரி, கட்டுநாயக்க விமான நிலையத்தில் - நேற்று மறியல் போராட்டம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

இத்தாலிக்குச் செல்வதற்காக அனுமதிக்கப்பட்ட ஐம்பது பேர், விமானம் புறப்படுவதற்கு முன்னர்- இவர்களுடைய பயணம் இரத்துச் செய்யப்பட்டதாக அறிவிக்கப்பட்டதையடுத்து, இவர்கள் மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

முகவர்கள் மூலம் இத்தாலிக்கு பயணிப்பதற்காக ஐம்பது பேர், முகவர் நிலையம் ஒன்றின் விமான அனுமதிச்சிட்டையுடன், கட்டுநாயக்க விமானநிலையம் சென்றிருந்தனர்.

விமானம் புறப்படுவதற்கு சற்று நேரத்திற்கு முன்பதாக, இவர்கள் வைத்திருந்த விமான அனுமதிச் சீட்டு போலியானது என, விமான நிலைய அதிகாரிகள் தெரிவித்ததையடுத்து, இந்த மறியற் போராட்டம் இடம்பெற்றது.

தம்மை இத்தாலிக்கு உடனடியாக அனுப்பவேண்டும் அல்லது அந்த நாட்டுக்கு நாடுகடத்துமாறு கோரியே, இந்த போராட்டம் நடத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

(01)

## பிரிட்டிஷ் பிரஜை கைது

(கொழும்பு)

கட்டுநாயக்க விமான நிலையத்தில் மதுபோதையில் பெண் ஒருவருடன் வாக்குவாதத்தில் ஈடுபட்ட பிரிட்டிஷ் நாட்டைச் சேர்ந்த நபர் ஒருவர் கைதுசெய்யப்பட்டு விடுவிக்கப்பட்டுள்ளார்.

நேற்றையதினம் லண்டனிலிருந்து ஹீத்ரோ விமான நிலையமூடாக கட்டுநாயக்க விமானநிலையத்துக்கு வந்துகொண்டிருந்த பெண்ணொருவருக்கும் இவருக்கும் இடையே வாக்குவாதம் ஏற்பட்டது.

இந்த சம்பவம் தொடர்பாக உடனடியாக விமானநிலையப் பொலிஸாருக்கு தகவல் கொடுக்கப்பட்டதையடுத்து, சம்பவ இடத்திற்கு வந்திருந்த பொலிஸார் மேற்படி பிரிட்டிஷ் நபரைக் கைதுசெய்து அவரை எச்சரிக்கையின் பின் விடுவித்தனர்.

(01)

# உதவி மருத்துவர்களின் கொடுப்பனவை அதிகரிக்குமாறு ஜனாதிபதி பணிப்பு!

உதவி மருத்துவ உத்தியோகத்தர்களுக்கான கொடுப்பனவு மற்றும் ஏனைய பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு ஜனாதிபதி சந்திரிகா சுகாதார அமைச்சருக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

கடந்த மாத இறுதியில் அரச உதவி மருத்துவர்களின் தமது சம்பள கொடுப்பனவுகள் மற்றும் ஏனைய பிரச்சினைகள் தொடர்பாக உரிய நடவடிக்கை எடுக்குமாறு வலியுறுத்தி நடத்திய வேலைநிறுத்தப் போராட்டத்தையடுத்து, ஜனாதிபதி இந்த உத்தரவை விடுத்துள்ளார். ஜனாதிபதியின் இந்த அறிவிப்புத் தொடர்பாக, சுகாதார அமைச்சரினால் சம்பந்தப்பட்ட திணைக்களங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

(01)

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 04.09.2003 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.